வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 11.05.2023 வியாழக்கிழமை | இதழ் : 153 | பக்கங்கள் : 16



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

## பரவுகின்றன மூவகை காய்ச்சல்கள்!

கொழும்பு, மே 2

தற்போது நாடு முழுவதும் மூன்று வகையான காய்ச்சல்கள் பரவி வருகின்றன என்று மருத்துவர்கள் எச்சரித்துள்ளனர்.

டெங்கு, இன்புளூவன்ஸா, எலிக்காய்ச்சல் என்பனவே மிக விரைவாகப் பரவுகின்றன. இவை அனைத்தின் அறிகுறிகளும் ஒரே மாதிரியானவை என்றும் மருத்துவர்கள் கூறுகின்றனர்.

தலைவலி, வாந்தி, உடல்வலி, சோர்வு போன்ற 15

## ஜனாதிபதி - தமிழ் கட்சிகள்
# இன்று பேச்சு!

**கொழும்பு, மே 11**

**இனப் பிரச்னைக்கான தீர்வு தொடர்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அழைப்பின் பேரில் வடக்கு, கிழக்கு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுடனான இரு நாள் பேச்சு இன்று ஆரம்பமாகின்றது.**

இன்று வியாழக்கிழமையும் நாளை வெள்ளிக்கிழமையுமாக இரு நாட்கள் இந்தப் பேச்சு நடைபெறவுள்ளது. இன்றைய தினம் மாலை 5 மணிக்கு ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறவுள்ள இந்தப் பேச்சில் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் காணி மற்றும் பிற பிரச்னைகள் தொடர்பாக ஆராயப்படவுள்ளன.

இந்தப் பேச்சில் இரா. சம்பந்தன் தலைமையில் இலங்கை தமிழரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் 15

## வட, கிழக்கு சகல எம்.பிக்களும் பேச்சில் பங்கேற்க வேண்டும்!

*சாணக்கியன் எம். பி.*

கொழும்பு, மே 11

அரசியல் தீர்வுக்காகவே வடக்கு, கிழக்கு மாகாண மக்கள் தமிழ் அரசியல்வாதிகளுக்கு ஆணை வழங்கியுள்ளார்கள். ஆகவே, ஜனாதிபதி தலைமையில் இன்று வியாழக்கிழமை இடம்பெறும் பேச்சில் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் தமிழ் அரசியல்வாதிகள் கலந்து கொள்ள வேண்டும் என்று இலங்கை தமிழரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் கேட்டுள்ளார்.

இனப் பிரச்னைக்கு தீர்வுக்கான பேச்சை ஜனாதிபதி தேர்தல் வரை இழுத்தடிக்க ஜனாதிபதி முயற்சித்தால் அவரின் நோக்கம் வெற்றி பெறாது. தமிழ் மக்களும் அவருக்கு ஆதரவு வழங்கமாட்டார்கள். எம்மை ஏமாற்றி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் ஜனாதிபதி பதவியை சிறந்த முறையில் வகிக்கவும் முடியாது 15

## 33 இலட்சம் பேருக்கு நலன்புரி கொடுப்பனவு

கொழும்பு, மே 11

நாட்டில் 33 இலட்சம் பேருக்கு 'அஸ்வெசும' நலன்புரி திட்டத்தில் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன என்று ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

நான்கு பிரிவுகளின் கீழ் இந்தக் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன. எதிர்வரும் ஜூலை முதலாம் திகதி தொடக்கம் இந்த நலன்புரி கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன. (ஐ)

(விரிவான செய்தி பக்கம் 10இல்)

## வெடுக்குநாறிமலையின் ஆதிசிவனுக்கு அபிஷேகம்



வவுனியா, மே11

வவுனியா வெடுக்குநாறி ஆதி சிவன் ஆலயத்தில் சிறப்பு அபிஷேகம் நேற்று புதன்கிழமை அதிகாலை மந்திரங்கள் முழங்க சிறப்பாக இடம்பெற்றது.

108 கும்பங்கள் வைக்கப்பட்டு - யாகம் வளர்க்கப்பட்டு இந்த சிறப்பு அபிஷேகம் நேற்று இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளிலிருந்தும் பக்தர்கள் பலர் பங்கேற்றிருந்தனர்.

வவுனியா வடக்கு - ஒலுமடு - வெடுக்குநாறி மலை ஆதிசிவன் (ஆதி லிங்கேஸ்வரர்) ஆலயத்தின் விக்கிரகங்கள் கடந்த மார்ச் 26ஆம் திகதி உடைத்தெறியப்பட்டன. வவுனியா மாவட்ட நீதிவான் நீதிமன்றின் கட்ட 15

## 2,500 கிலோ கஞ்சா சிக்கியது!

சென்னை, மே 11

இலங்கைக்கு கடத்தப்படவிருந்த 2ஆயிரத்து 500 கிலோ கஞ்சாவை தமிழ்நாடு பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

படகு மூலம் இவற்றை இலங்கைக்கு கடத்துவதற்காக தூத்துக்குடியின் சாத்தான் குளம் என்ற 15

## ரயில் நிலைய பொறுப்பதிகாரிகள் பணிப்புறக்கணிப்பு!

கொழும்பு, மே 11

ரயில் நிலைய அதிபர்கள் நேற்று நள்ளிரவு முதல் 24 மணிநேர அடையாளப் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டத்தால் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு உட்பட அனைத்து மாவட்டங்களிலும் ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டன.

நள்ளிரவு வரை இந்தப் பணிப் புறக் 15

## புலிட்சர் விருது இலங்கையரும் சிபாரிசு



கொழும்பு, மே 11

ஒளிப்பட செய்தியாளர்களுக்கான உலகின் மிகவும் முக்கிய விருதாக விளங்குகின்ற புலிட்சர் விருதுக்கு இலங் 15

## இலங்கைக்கு கடன் வழங்கிய நாடுகள் ஒரே தளத்தில் பேச்சு

கொழும்பு, மே 11

இலங்கையின் சகல கடன் வழங்குநர்களும் பங்கேற்ற கலந்துரையாடலொன்று நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

கண்காணிப்பு மட்டத்தின் அடிப்படையில் சீனா இந்த கலந்துரையாடலில் பங்கேற்றது. ஜப் பான், இந்தியா மற்றும் 15

## துயிலும் இல்லத்தை விடுவிக்க கோரி
# உண்ணாவிரதம்!

*மாவீரர்களின் பெற்றோர்கள் அறிவிப்பு*

முல்லைத்தீவு, மே 11

இராணுவம் ஆக்கிரமித்துள்ள அளம்பில் மாவீரர் துயிலும் இல்லத்தை விடுவிக்குமாறு கோரி உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுப்போம் என்று மாவீரர்களின் பெற்றோர்கள் தெரிவித்துள்ளனர்.

அளம்பில் மாவீரர் துயிலும் இல்லம் இருந்த இடத்தை ஆக்கிரமித்து 15



## கடன் மறுசீரமைக்கப்பட்டாலும் மக்களின் வைப்பு காக்கப்படும்

*மத்திய வங்கி ஆளுநர் உறுதி*

கொழும்பு, மே 11

சர்வதேச கடன் வழங்குநர்களுடனான கலந்துரையாடலின் பின்னர் உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு மேற்கொள்ளப்பட்டாலும் பொதுமக்களின் வைப்புத்தொகை



மற்றும் வங்கி முறைமை பாதுகாக்கப்படும் என்று இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க நேற்று உறுதியளித்துள்ளார்.

"பொருளாதாரத்தின் நிலை: சவால்கள் மற்றும் முன்னோக்கு மத்திய 15

## இப்படியும் நடக்கிறது...!

சில வாரங்களுக்கு முன்னர் ஒரு முக்கிய தமிழ் அரசியல் கட்சி ஒன்றின் தலைவருடன் பேசிக்கொண்டிருந்தேன். ஐக்கிய மக்கள் சக்தியுடன் பயணிக்கும் சிறுபான்மைக் கட்சி ஒன்றின் தலைவர் அவர்.

எதிரணியில் இருந்து முக்கிய தலைவர்கள் சிலர் அரசுடன் இணையலாம் என்ற ஊகம் நிலவிய காலம் அது. அரசுடன் என்று எழுதுவதுகூட சரியானதாக இருக்குமோ தெரியவில்லை. ஏனெனில், அவர்கள் அரசுடன் இணைவது என்பதை விட ரணிலுடன் இணைவது என்று கூறுவதையே விரும்புவது தெரிந்தது.

நான் அவருடன் பேசுவதற்கு முதல்நாளில்தான் அவர் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவையும் சந்தித்திருந்தார்.

நான் அவரிடம் எடுத்த எடுப்பிலேயே கேட்டேன், 'எந்த அமைச்சை பொறுப்பெடுக்கிறீர்கள்?' என்று.

அவர் திரும்பிக் கேட்டார், 'நாளை ஜனாதிபதித் தேர்தல் நடந்தால் மூன்று வேட்பாளர்கள் போட்டியிடுவார்கள் என்று நம்புகிறோம். ரணில், சஜித், அநுரகுமார அப்படித்தானே? என்று.

'சிலவேளை டலஸ் அணியிலிருந்து ஒருவர் போட்டியிடலாம். ஆனால், இவர்கள் மூவரும்தான் முக்கியமானவர்கள்' என்றேன்.

'அப்படியெனில், இந்த மூன்று பேரில் நாங்கள் - சிறுபான்மையினர் யாரை ஆதரிக்க வேண்டும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்' என்று என்னிடமே திரும்பிக் கேட்டார்.

நான் அவர் வாயாலேயே பதிலையும் எடுத்துவிட என்று அமைதியாக இருந்தேன். அவரே தொடர்ந்தார்.

'எங்கள் பிரச்னையை முழுமையாக அறிந்தாவது வைத்திருப்பவர் ரணில் ஒருவர்தான். நான் சஜித்தின் அணியில் இருந்தாலும் அவர் இனப்பிரச்னையை எப்படி அறிந்து வைத்திருக்கிறார் அல்லது புரிந்துவைத்திருக்கிறார் என்பதே தெரியவில்லை. அநுரகுமார ஆகக்குறைந்தது இந்த பதின்மூன்றையே ஏற்றுக்கொள்ளும் நிலையில் இல்லையே' என்றார்.

இன்று வடக்கு - கிழக்கு தமிழ் எம்.பிக்களை ஜனாதிபதி சந்தித்து பேச்சு நடத்த இருக்கிறார். இந்தப் பேச்சுக்கு முன்னதாக அதுகுறித்து திட்டமிடுவதற்காக தமிழரசு கட்சி எம்.பிக்கள் நேற்று முன்தினம் ஜனாதிபதியை சந்தித்திருந்தனர். இந்தச் சந்திப்பில் சில விடயங்களை ஜனாதிபதி ஏற்றுக் கொண்டிருக்கிறார்.

இனப்பிரச்னை பற்றி பேசுவதானால் வடக்கு எம்.பிக்களுடன் மட்டும் பேசக்கூடாது என்றும் அப்படியெனில், தாங்கள் கலந்து கொள்ளப்போவதில்லை எனவும் கடந்த வாரம் சனிக்கிழமையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு யாழ்ப்பாணத்தில் கூடி ஆராய்ந்த பின்னர் அறிவித்திருந்தது. இந்தக் கருத்தை பின்னர் சம்பந்தனும் தெரிவித்திருந்தார். நேற்றுமுன்தினம் நடந்த சந்திப்பில் தமிழரசும் அதனை வலியுறுத்தியதைத் தொடர்ந்து கிழக்கு தமிழ் எம்.பிக்களையும் அழைக்க ஜனாதிபதி இணக்கம் தெரிவித்திருந்தார்.

இந்நிலையிலேயே இன்று வியாழக்கிழமை வடக்கு, கிழக்கு காணிப் பிரச்னை உட்பட தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் குறித்தும் பேசப்படும் என்று ஜனாதிபதி தெரிவித்திருக்கிறார். நாளை வெள்ளிக்கிழமை அரசியல் பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வு காணும் விதமாக அதிகாரப் பகிர்வு குறித்துப் பேசப்படும் என்றும் ஜனாதிபதி கூறியிருக்கிறார்.

வடக்கு மற்றும் கிழக்கில் தமிழ் மக்கள் எதிர்கொண்டு வரும் பிரச்னைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்காது. அதனை புத்திசாதுரியமாக அணுகி அந்தப் பிரச்னைகளுக்கு தீர்வு காணப்படவேண்டும். அதற்கு ஜனாதிபதி தரப்பிலும் எந்தத் தடையும் இருக்காது என்றும் நம்பலாம்.

ஆனால், நாளை நடைபெறவுள்ள அதிகாரப் பகிர்வு குறித்த பேச்சுகளில் வழக்கம்போல புதிய அரசமைப்பு, சமஷ்டி, வடக்கு - கிழக்கு இணைப்பு என்று பேசத் தொடங்கினால், அதனை நிறைவேற்றக்கூடிய நிலையில் இன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இருக்கிறாரா என்பதையும் கவனத்தில் எடுக்கவேண்டும்.

நேற்று முன்தினம் ஜனாதிபதியை சந்தித்து பேச்சுகளுக்கான பேச்சை நடத்தி முடித்தும், இந்தியத் தூதுவரை தமிழரசு தலைவர்கள் சந்தித்திருந்தனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மக்கள் ஆணைபெற்ற தலைவர் அல்ல. இதனை நாங்கள் சொல்லவில்லை. திரும்பத்திரும்ப தமிழரசு எம். பி. சுமந்திரனே கூறிக்கொண்டிருக்கிறார். அத்தகைய ஒருவருடன் பேசுகின்ற போது, அவரால் செய்து முடிக்கக்கூடிய வற்றை புத்திசாதுரியமாகக் கேட்டுப்பெறவேண்டும். அடுத்த தேர்தலில் சிறுபான்மை யினரின் வாக்குகளை எதிர்பார்த்திருக்கும் அவர், எங்கள் ஆதரவுக்காக, தெற்கில் முழுமையான எதிர்ப்பை எதிர்கொள்வதற்கும் நாமே வழிசமைத்துவிடக் கூடாது.!

- ஊர்க்குருவி

# வாரத்துக்கு 22 ஆயிரம் கிலோ வாழைப்பழம் ஏற்றுமதி செய்ய திட்டம்!

யாழ்ப்பாணம், மே 11

யாழ்ப்பாணத்திலிருந்து வாரத்துக்கு 22 ஆயிரம் கிலோ கதலி வாழைப்பழத்தை ஏற்றுமதி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

கிடைக்கின்ற வாய்ப்புகளை சரியான முறையில் பயன்படுத்தி உள்ளூர் உற்பத்திகளை சர்வதேச சந்தைகளுக்கு எடுத்துச் செல்கின்றபோது, எமது மக்களின் பொருளாதாரத்தை உயர்ந்த நிலைக்கு கொண்டு செல்ல முடியும் என்று தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தீர்க்கதரிசனமான முயற்சிகளை முன்னெடுக்கும் அரசாங்க அதிகாரிகளுக்கு வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், புத்தூரில் அமைக்கப்பட்டுள்ள, வழைப்பழ ஏற்றுமதி தொழில்சாலையை அண்மையில் பார்வையிட்ட கடற்றொழில் அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உலக வங்கி மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றின் நிதியுதவியில் விவசாய செயல்பாடுகளை நவீனமயப்படுத்தும் திட்டத்துக்கு அமைய அமைக்கப்பட்டுள்ள குறித்த தொழில்சாலையில் பதனிடப்படுகின்ற கதலி வாழைப்பழங்கள் டுபாய் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு முதற்கட்டமாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் சுமார் 250 விவசாயிகள் நேரடியாக பயனடைந்துள்ளனர். கதலி வாழைப்பழத்துக்கு நியாயமான விலையையும் யாழ்ப்பாண விவசாயிகள் பெறத் தொடங்கியுள்ளனர்.

எதிர்வரும் மாதங்களில் இத்திட்டத்தின் மூலம் ஏற்றுமதியை விஸ்தரித்து நேரடியாக பயனடையும் விவசாயிகளின் எண்ணிக்கையை 700ஆக உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளதா அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், எதிர்வரும் மாதங்களில் வாரத்துக்கு 22 ஆயிரம் கிலோ கதலி வாழைப்பழம் யாழ்ப்பாணத்தில் இருந்து ஏற்றுமதி செய்ய எதிர்பார்க்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விவகாரம் உண்மையை அரசு பகிரங்கப்படுத்துமா?

## இந்துனில் எம். பி. கேள்வி

கொழும்பு, மே 11

திருட்டில் ஈடுபட்ட நபர் பொது மக்களுடன் ஒன்றிணைந்து திருடன், திருடன் என கூச்சலிடுவதை போலவே எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விவகாரத்தில் 250 மில்லியன் டொலர் இலஞ்சம் வழங்கப்பட்டதாக குறிப்பிடப்படுகிறது. எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்தின் உண்மை தன்மையை அரசாங்கம் பகிரங்கப்படுத்துமா? என்பது சந்தேகத்துக்குரியது என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் துஷார இந்துனில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்து தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது,

2021ஆம் ஆண்டு நாட்டில் அரசியல் மற்றும் பொருளாதார ஸ்திரமற்ற தன்மை காணப்பட்ட வேளையில் தான் எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் கொழும்பு துறைமுகத்தை அண்மித்த கடற்பரப்பில் நங்கூரமிட்டு கடலில் மூழ்கியது.

இந்த கப்பல் விபத்தினால் கடல் வளங்களுக்கும், கடல் வாழ் உயிரிணங்களுக்கும், சுற்றுலாத்துறை சேவை கைத்தொழிலுக்கும், மீன்பிடி கைத்தொழிலுக்கும் பாதிப்பு ஏற்பட்டது. இந்த கப்பல் விபத்து தொடர்பில் மக்கள் மத்தியில் மாறுப்பட்ட பல நிலைப்பாடுகள் காணப் படுகின்றன. இந்த விவகாரம் தேசிய பிரச்னையாக காணப்படுகிறது.

கப்பல் விபத்தால் கடல் வளங்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்கு உரிய நிறுவனத்திடமிருந்து நட்டஈட்டை பெற்றுக் கொள்ள பொறுப்புக் கூற வேண்டிய தரப்பினர்கள் முறையாக செயற்பட்டார்களா என்ற சந்தேகம் காணப்படுகிறது.

சுற்றாடல் அமைச்சின் விடயானங்களுக்குள் உள்ளங்கப்பட வேண்டிய கடல் வளங்கள் பாதுகாப்பு அதிகாரசபை வீடமைப்பு அபிவிருத்தி அமைச்சின் விடயதானங்களுக்குள் உள்வாங்கப்பட்டுள்ளது.இது பொருத்தமற்ற தொரு செயல்படாகும். இந்த கப்பல் விபத்து தொடர்பில் முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதா என்பது சந்தேகத்துக்குரியதாக உள்ளது.

எக்பிரஸ் பேர்ள் கப்பல் விவகாரத்தை பாராளுமன்றத்தில் விவாதிப்பது சட்டவிரோதமானது என நீதியமைச்சர் குறிப்பிடுகிறார். ஆனால், நட்ட ஈடு பெற்றுக்கொள்வதை தடுக்கும் வகையில் சாமர குணசேகர என்பவருக்கு 250 மில்லியன் டொலர் வழங்கப்பட்டதாக குறிப்பிட்டது மாத்திரம் சட்டத்துக்கு முரணானது இல்லையா, இந்த 250 மில்லியன் டொலர் இலஞ்சம் விவகாரத்தின் உண்மை தன்மை முதலில் ஆராயப்பட வேண்டும்.

பொது இடத்தில் திருட்டில் ஈடுபடும் நபர் பொது மக்களுடன் ஒன்றிணைந்து 'திருடன்,திருடன் 'என கூச்சலிடுவதற்கு ஒப்பானதாகவே இந்த 250 மில்லியன் டொலர் இலஞ்சம் விவகாரம் காணப் படுகிறது. எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்தின் உண்மை தன்மையை அரசாங்கம் பகிரங்கப்படுத்துமா என்பது சந்தேகத்துக்குரியது - என்றார். (ஐ)

# உண்மைகளை வெளிப்படுத்த வலியுறுத்தி நேற்று போராட்டம்!

கொழும்பு, மே 11

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தொடர்பாக மறைக்கப்பட்ட விடயங்களை அம்பலப்படுத்த வலியுறுத்தி நேற்று போராட்டம் நடைபெற்றது.

கொழும்பு -பத்தரமுல்லை, பொல்துவ சந்திக்கு அருகில் நேற்று இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

எக்ஸ் பிரஸ் பேர்ள் கப்பலால் ஏற்பட்ட சூழல் பாதிப்புக்கு இலங்கையில் வழக்கு தொடரவும் மறைக்கப்பட்டுள்ள விடயங்களை அம்பலப் படுத்துமாறு கோரியும் சோசலிச இளைஞர் சங்கத்தால் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (ஐ)



ஈழநாடு
Eelanadu
11.05.2023 வியாழக்கிழமை
சோபகிருது வருடம், சித்திரை 28

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# மாயமானை நம்பிச் செல்லுதல்?

மீண்டும் இனப்பிரச்னைக்கான தீர்வு தொடர்பில் தமிழ் கட்சிகளுடன் ரணில் பேசவுள்ளார். ஏற்கனவே இவ்வாறானதொரு பேச்சு இடம்பெற்ற போதும் அதில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை. இந்த நிலையில், மீண்டுமொரு பேச்சு எந்த அடிப்படையில் இடம் பெறவுள்ளது? 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தப் போவதாக ரணில் விக்கிரமசிங்க கூறியிருந்தார். ஆனால், இன்றுவரையில் அதில் எந்தவொரு முன்னேற்றத்தையும் அவர் காண்பிக்கவில்லை.

13ஆவது திருத்தச் சட்டம் அரசியல் யாப்பில் இருக்கின்ற விடயம். அதனை அமுல்படுத்துவதற்கு தமிழ் கட்சிகளுடன் பேச வேண்டியதில்லை. 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தும் விடயத்தில் பிரதான தமிழ்க் கட்சிகள் எவையுமே ஆட்சேபனை தெரிவிக்கவில்லை. இந்த நிலையில் அண்மையில், ரணில் விக்கிரமசிங்க புதிய அரசியல் யாப்பு என்னும் சொல்லையும் உச்சரித்திருந்தார். 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவதே பிரச்னையாக இருக்கின்ற நாட்டில் 13இற்கு அப்பால் செல்லும் புதிய அரசியல் யாப்பு ஒன்றை எவ்வாறு கொண்டுவர முடியும்?

2015இல் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதைத் தொடர்ந்து அவ்வாறானதொரு மாயமானுக்கு பின்னால்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஓடிக் கொண்டிருந்தனர். ரணிலும் அந்த மாயமான் சாத்தியம் என்பது போலவே செயல்பட்டுக் கொண்டிருந்தார். இறுதியில் அனைத்தும் புஸ்வாணமாகின. இந்த நிலையில், மீண்டும் தேசிய இனப் பிரச்னைக்கான அரசியல் தீர்வை அ-ஆவில் ஆரம்பிப்பதானது மீண்டுமொரு மாயமானுக்கு பின்னால் அலைந்து திரியவே வழிவகுக்கும்.

இன்றைய சூழலில், ரணில் விக்கிரமசிங்கவால் பெரிதாக எதனையும் செய்துவிட முடியாது. ஆகக் குறைந்தது 13ஆவது திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் சில விடயங்களையாவது அவர் செய்ய முயற்சித்தால் அதுவே ஆச்சரியம்தான். இந்த நிலையில், மீண்டும் தேசிய இனப் பிரச்னைக்கான தீர்வென்னும் பெயரில் சந்திப்புகள் இடம்பெறப் போவதாகச் சொல்வதும் அதில், கிழக்கு பாராளுமன்ற உறுப்பினர்களை இணைத்தால்தான் வருவோமென்பதும் தமிழரசு கட்சி தனியாக சந்திப்பதும் பின்னர், இந்திய தூதுவருக்கு விளக்கமளித்ததாக கதைகள் புனைவதும் நீண்டகாலமாக தமிழ் மக்கள் மத்தியில் சலிப்பூட்டிய சங்கதிகள்தான். எனவே, அரைத்த மாவை அரைத்து கதைகள் சொல்வதை முதலில் தமிழ்த் தேசிய கட்சிகள் என்போர் நிறுத்த வேண்டும்.

சம்பந்தனின் இயலாமை மக்கள் அறிந்ததே - இந்த நிலையில், சம்பந்தனின் தலைமையில் கட்சிகள் சந்திக்கப் போவதாக சொல்வதும்கூட மக்களுக்கு சலிப்பூட்டும் இன்னொரு கதைதான். ஒரு வேளை சம்பந்தனின் இயலாமையை ரணில் விக்கிரமசிங்க தனக்கு சாதகமாகவும் பயன்படுத்திக் கொள்ளலாம். மேலும், இந்திய தூதுவர் சம்பந்தனை சந்திப்பதாக கூறுவதும் சம்பந்தன் இந்திய தூதுவருக்கு விளக்கமளித்ததாகக் கூறுவதும்கூட, தமிழ் மக்கள் மத்தியில் சலிப்பூட்டும் கதைகள்தான். இந்தியா அதன் நிலைப்பாட்டை தெளிவாகக் கூறியபின்னர், இந்திய தூதுவருக்கு அரசியல் தீர்வு தொடர்பில் விளக்கமளிக்க என்ன அவசியமுண்டு. இந்தியாவின் நிலைப்பாடு 13ஆவது திருத்தச் சட்டம்தான். இது இந்தியாவின் கொள்கை நிலைப்பாடு. இந்த நிலையில், கதைகள் புனைவதை விட்டுவிட்டு ரணில் விக்கிரமசிங்கவோடு ‘வெட்டு ஒன்று துண்டு இரண்டு’ - என்று பேசுவதே சரியானது. அவ்வாறில்லாது, ரணில் பிரச்னையை தீர்க்கப் போகிறாரென அழைத்தவுடன் அதற்கு விளக்கமளித்துக் கொண்டிருப்பதில் எவ்வித பயனுமில்லை.

# தப்புலவை கைது செய்வதற்கான தடை உத்தரவு ஜூன் வரை நீடிப்பு

*கொழும்பு, மே 11*

முன்னாள் சட்டமா அதிபர் தப்புல டி லிவேராவை கைது செய்து வாக்குமூலம் பதிவு செய்வதை தடுக்க விதிக்கப்பட்ட தடை உத்தரவு எதிர்வரும் ஜூன் மாதம் 22 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் சட்டமா அதிபர் தாக்கல் செய்த எழுத்தாணை மனு நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் நீதிபதி நிஷங்க பந்துல கருணாரத்ன மற்றும் எம். ஏ. ஆர். மரிக்கார் ஆகியோர் அடங்கிய அமர்வு முன்னிலையில் அழைக்கப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பில் தாம் தெரிவித்த கருத்து தொடர்பில் விசாரணை செய்வதற்கும் வாக்குமூலங்களைப் பதிவு செய்வதற்கும் பயங்கரவாத விசாரணை பிரிவு தன்னை அழைத்துள்ளதாக மனுதாரரான முன்னாள் சட்டமா அதிபர் தெரிவித்துள்ளார்.

தாம் சட்டமா அதிபராக கடமையாற்றிய போது மேற்கொள்ளப்பட்ட செயலை பொலிஸாரால் விசாரிக்க முடியாது எனவும், சட்டமா அதிபரின் சிறப்புரிமை மீறப்படும் எனவும் முன்னாள் சட்டமா அதிபர் தனது மனுவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, தன்னை கைது செய்து விசாரணை நடத்துவதைத் தடுக்க உத்தரவிடக் கோரி இந்த மனு தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் பிரதிவாதிகளுடன் கலந்தாலோசிப்பது அவசியம் எனவும் அதற்கு சுமார் ஒரு மாத கால அவகாசம் தேவை எனவும் நீதிமன்றில் முன்னிலையாகிய மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் பரிந்த ரணசிங்க தெரிவித்தார்.

மனுதாரர் கோரிக்கைக்கு ஆட்சேபனை தெரிவிக்காததால், மேலதிக சொலிசிட்டர் ஜெனரலின் கோரிக்கையை ஏற்று, மனுவை ஜூன் 22ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# பெரியபுராணம் சொற்பொழிவு தொடர்!

*யாழ்ப்பாணம், மே 11*

சைவ வாழ்வியலில் பெரிய புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்ப்படுத்தும் முகமாக சிவசிறீ பால. திருகுணானந்தக் குருக்கள் அனுசரணையில் வாராந்தம் சிறப்பு சொற்பொழிவு நடைபெற்று வருகின்றது.

சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடக்கும் ஐந்தாவது தொடர் சொற்பொழிவு சிறுப்பிட்டி நாகதம்பிரான் ஆலயத்தின் பிரதான மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

சேக்கிழார் பெருமானின் குருபூசையை தொடர்ந்து சொற்பொழிவை இளம் சைவப்புலவர் க. கயிலைவாசன் “சிவ பூஜைக்கு உரிய மலரை முகர்ந்த மனைவியின் கையை வெட்டிய நாயனார்“ என்னும் தலைப்பில் ஆற்றுவார்.

சொற்பொழிவின் நிறைவில் மாணவர்களிடம் கேள்விகள் கேட்கப்பட்டு பரிசுகள் வழங்கப்படவுள்ளது. (ஐ)

# பெண்ணிடம் வழிப்பறி!

*முல்லைத்தீவு, மே 11*

புதுக்குடியிருப்பில் பெண் ஒருவரிடம் இருந்து 2 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் வழிப்பறி செய்யப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்கு உட்பட்ட உடையார்கட்டு நகர் பகுதியில் உள்ள ஏ. ரி. எம். இயந்திரத்தில் பணத்தை எடுத்துவிட்டு வீதியால் நடந்து சென்ற பெண்ணின் பணப்பையை மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் பறித்து சென்றுள்ளனர்.

பணத்தை பறிகொடுத்த பெண் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

அந்தப் பெண்ணிடமிருந்து 2 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் வழிப்பறி செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# சந்நிதியான் ஆச்சிரமத்தால் மலையக மக்களுக்கு உதவிகள்!

*வடமராட்சி, மே 11*

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமம் - மலையக மக்களுக்கு 8 இலட்சத்து 13 ஆயிரம் ரூபாய் பெறுமதியான பல்வேறு உதவிகளை வழங்கி வைத்துள்ளது.


பதுளை - தெமோதரை சௌதம் தமிழ் மகா வித்தியாலயத்தின் தெரிவு செய்யப்பட்ட 75 மாணவர்களுக்கு 2 இலட்சம் ரூபாய் பெறுமதியான கற்றல் உபகரணங்களும் உயர்தர கற்றல் செயல்பாட்டுக்காக பண்டாரவளை பிரதேசத்தை சேர்ந்த மாணவிக்கு ஒரு இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் பெறுமதியான மடிக்கணினியும் வழங்க்பட்டன.

நிவ்பர்க் தோட்டம், எல்ல பிரதேசத்தில் அமைந்துள்ள பாலவிநாயகர் ஆலய கட்டட பணிக்காக ஒரு இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் நிதியும் ஆலய நிர்வாகத்தினரிடம் கையளிக்கப்பட்டது.

பூனாகலை - கபரகலை கிராமத்தில் ஏற்பட்ட மண்சரிவால் பாதிக்கப்பட்ட 75 குடும்பங்களுக்கு 3 இலட்சம் ரூபாய் பெறுமதியான சமையல் பாத்திரங்கள் வழங்கப்பட்டன. அத்துடன், புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றவுள்ள 5 மாணவர்களுக்கு 23 ஆயிரம் ரூபாய் பெறுமதியான பயிற்சி புத்தகங்கள் வழங்கிவைக்கப்பட்டன.

இந்த செயல்திட்ட உதவிகளை சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் மோகனதாஸ் சுவாமிகள் தொண்டர்கள் சகிதம் நேரடியாகச் சென்று வழங்கி வைத்தார். (ஐ-02)

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



# அன்புமணி - திருமாவளவன் இரகசியமாக சந்தித்து பேச்சு

சென்னை, மே 11

பாராளுமன்றத் தேர்தலில், பா. ம. க. தலைவர் அன்புமணியும் விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவனும் இணைந்து செயல்படும் வகையில் இரகசிய பேச்சு நடத்தப்பட்டு உள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

பாராளுமன்றத் தேர்தலில், தி. மு. க., கூட்டணியில் விடுதலை சிறுத்தைகள் கட்சிக்கு, இரண்டு தொகுதிகள் கிடைக்குமா அல்லது ஒரு தொகுதி ஒதுக்கப்படுமா என்ற கேள்வி எழுந்துள்ளது. கடந்த பாராளுமன்றத் தேர்தலில், சிதம்பரம் தொகுதியில் திருமாவளவன், தனி சின்னத்தில் போட்டியிட்டு, குறைந்த வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். இதே போல், விழுப்புரம் தொகுதியில், அக்கட்சியின் பொதுச் செயலர் ரவிகுமார், தி.மு.க., சின்னத்தில் போட்டியிட்டு, திருமாவளவனைக் காட்டிலும் அதிக வாக்குகளை பெற்று வெற்றி பெற்றார்.

ஆளும் கட்சியை எதிர்க்க வேண்டிய சமயங்களில், விடுதலை சிறுத்தைகள் எதிர்க்கட்சியை போலவே எதிர்க்கிறது. ஆதரிக்க வேண்டிய இடங்களில் கூட்டணி கட்சியை போலவே செயல்படுகிறது என, அக்கட்சியினர் கூறி வருகின்றனர். மேலும், வரும் பாராளுமன்றத் தேர்தலில், தி.மு.க., கூட்டணியில், மூன்று தொகுதிகளை, அக்கட்சி எதிர்பார்க்கிறது. ஆனால், அதற்கு வாய்ப்பு இல்லை என்பதால், அன்புமணி, திருமாவளவன் தரப்பினர் இரகசியமாக சந்தித்து பேசினார் என்று தெரிகிறது.

(ஐ)

# எதிரிகள் இல்லாத அரசியலை முதல்வர் ஸ்டாலின் செய்கிறார்!

## அமைச்சர் துரைமுருகன்

திருநெல்வேலி, மே 11

தமிழகத்தில் எதிரிகள் இல்லாத அரசியலை முதல்வர் மு. க. ஸ்டாலின் செய்து வருகிறார் என்று தி. மு. க. பொதுச்செயலாளரும், மாநில நீர்வளத் துறை அமைச்சருமான துரைமுருகன் தெரிவித்தார்.

திருநெல்வேலியில் நடைபெற்ற திமுக அரசின் 2 ஆண்டுகால சாதனை விளக்க பொதுக்கூட்டத்தில் அவர் பேசுகையில்,

தமிழகத்தில் இப்போது எதிர்க்கட்சி தலைவராக ஆளுநர்தான் செயல்படுகிறார். பழனிசாமி சிவனே என்று இருக்கிறார். பன்னீர்செல்வம் எங்கு இருக்கிறார் என்றே தெரியவில்லை. எதிரிகள் இல்லாத அரசியலை தமிழக முதல்வர் செய்து வருகிறார்.

கருணாநிதி அகில இந்திய அரசியலில் சாதித்து காட்ட 10 முதல் 15 ஆண்டுகள்வரை ஆனது. ஆனால், தற்போதைய முதல்வர் மு. க. ஸ்டாலின் பொறுப்பேற்று 2 ஆண்டு காலத்திலேயே இந்தியாவின் குறிப்பிடத்தக்க தலைவராக இருக்கிறார்.

எதிர்க்கட்சியான அ. தி. மு. கவும், எதிரியான பா. ஜ. கவும் நாங்கள் 2 ஆண்டுகளில் ஒன்றும் செய்யவில்லை என சொல்லவில்லை. ஆனால், நாங்கள் ஒன்றும் செய்யவில்லை என்று தமிழக ஆளுநர் சொல்லி வருகிறார் என்றும் கூறினார். (ஐ)

# தி.மு.க. சொத்துப் பட்டியல் விவகாரம் அண்ணாமலை மீது முதல்வர் வழக்கு

சென்னை, மே 11

சொத்து பட்டியல் விவகாரம் தொடர்பாக அண்ணாமலைமீது முதல்வர் மு. க. ஸ்டாலின் அவதூறு வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

தி. மு. கவினரின் சொத்துப் பட்டியல் என்றும் தனது ரபேல் மணிக்கூடு தொடர்பான விவரங்கள் என்றும் சில தகவல்களை றறற.நஅெயநெஅெயமமயட. உழஅ என்ற இணையதளத்தில் அண்ணாமலை வெளியிட்டார்.

தி. மு. க. அமைச்சர்கள் எ.வ.வேலு, கே.என்.நேரு, பொன்முடி மற்றும் அவரின் மகன் கவுதம் சிகாமணி, அன்பில் மகேஷ் பொய்யாமொழி, உதயநிதி ஸ்டாலின், எம்.பி.க்கள் கனிமொழி, ஆற்காடு வீராசாமி மகன் கலாநிதி வீராசாமி, டி. ஆர்.பாலு, ஜெகத்ரட்சகன், துரைமுருகன் மகன் கதிர் ஆனந்த், மு.க.ஸ்டாலின் மருமகன் சபரீசன், கலாநிதி மாறன் ஆகிய 12 பேரின் சொத்து பட்டியல் என்ற பெயரில் சில ஆவணங்களை பா. ஜ. க. மாநில தலைவர் அண்ணாமலை கடந்த மாதம் வெளியிட்டார்.

அண்ணாமலை வெளியிட்ட சொத்து ஆவணங்கள் போலியானவை என்று தி. மு. க. சார்பில் மறுப்பு தெரிவிக்கப்பட்டது. அண்ணாமலை மன்னிப்பு கேட்காவிட்டால் வழக்கு தொடரப்படும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

இந்நிலையில், சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் பா. ஜ. க. தலைவர் அண்ணாமலை மீது முதல்வர் மு. க. ஸ்டாலின் அவதூறு வழக்கு தொடர்ந்துள்ளார். முதல்வரின் நற்பெயருக்கும், புகழுக்கும் களங்கம் விளைவிக்கும் வகையில் அண்ணாமலை கருத்து தெரிவித்துள்ளார் என்று முதல்வர் மு. க. ஸ்டாலின் அவதூறு வழக்கு தொடர்ந்துள்ளார்.

(ஐ)

# பன்னீர், தினகரன் தரப்பை சேர்க்கும் நிர்ப்பந்தத்தை பா. ஜ. க. ஏற்படுத்தாது

## முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார்

சென்னை, மே 11

“ஓ. பன்னீர்செல்வம் (ஓ. பி. எஸ்.) - டி. டி. வி. தினகரன் சந்திப்பால் எந்தவிதமான தாக்கமும் அ. தி. மு. கவுக்கு ஏற்படப்போவது கிடையாது. பன்னீர்செல்வம், டி. டி. வி. தினகரன், சசிகலாவை கட்சியில் ஒருபோதும் சேர்க்கப்போவது இல்லை. பா. ஜ. கவும் அதுபோன்ற நிர்ப்பந்தத்தை எங்கள் மீது வைக்காது” என்று அ. தி. மு. க. முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் கூறியுள்ளார்.

சென்னையில் அ. தி. மு. க. முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் செவ்வாய்கிழமை செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவரிடம், பன்னீர்செல்வம், தினகரன் இணைவு குறித்து கேட்கப்பட்டது. அதற்கு பதிலளித்த அவர்,

“காய்ந்த கொல்லையில் குதிரை மேய்ந்தால் என்ன? கழுதை மேய்ந்தால் என்ன? இந்த இணைப்பால் ஒரு தாக்கமும் ஏற்படாது. ஓபிஎஸ் - டிடிவி சந்திப்பு என்பது, நீண்ட நாட்களாக சந்தித்துக் கொள்ளாத கவுண்டமணியும் செந்திலும் சந்தித்தால் எப்படி இருக்குமோ? அதுபோலத்தான் நகைச்சுவையோடு, கோமாளித்தனமான ஒரு சந்திப்பு.

அரசியலில் சந்தர்ப்பவாதம், துரோகம், நிறம் மாறுபவர் ஓ. பி. எஸ். அவரை நம்புகின்ற அனைவருக்குமே துரோகம் நினைப்பவர். எனவே ஓ. பி. எஸ். - டி. டி. வி. சந்திப்பால் எந்தவிதமான தாக்கமும், அ. தி. மு. கவுக்கு ஏற்படப்போவது கிடையாது. ஓ. பி. எஸ், டி. டி. வி. தினகரன், சசிகலாவை கட்சியில் ஒருபோதும் சேர்க்கப்போவது இல்லை. பாஜகவும் அதுபோன்ற நிர்ப்பந்தத்தை எங்கள் மீது வைக்காது” என்று அவர் கூறினார்.

(ஐ)

**மே - 11 வியாழக்கிழமை**
**சோபகிருது வருடம் - சித்திரை 28**
**நல்ல நேரம் : 10.30 - 12.00**
**ராகு காலம் : 01.30 - 03.00**
**திதி : திதித்துவயம்**




**மேடம்**
கணவன் - மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். வியாபாரத்தில் சில தந்திரங்களை கற்றுக் கொள்வீர்கள். சக ஊழியர்களுடன் இருந்த மோதல்கள் விலகும். புது அத்தியாயம் தொடங்கும் நாள்.

**இடபம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் உங்களை அறியாமலே ஒருவித படபடப்பு தாழ்வு மனப்பான்மை வந்து செல்லும். வியாபாரத்தில் பழைய சரக்குகளை போராடி விற்பீர்கள். கவனம் தேவைப்படும் நாள்.

**மிதுனம்**
சோர்வு நீங்கி துடிப்புடன் செயல்பட தொடங்குவீர்கள். சகோதரர்களால் பயனடைவீர்கள். பழைய பாக்கிகள் வாசூலாகும். சக ஊழியர்களுக்கு உதவுவீர்கள். நன்மைகள் உண்டாகும் நாள்.

**கடகம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். வியாபாரத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் உயர் அதிகாரிகள் அதிசயிக்கும்படி நடந்து கொள்வீர்கள்.

**சிம்மம்**
குடும்பத்தில் அடிப்படை வசதிகளை மேம்படுத்தவீர்கள். சுற்றி இருப்பவர்களின் சுயரூபத்தை தெரிந்துகொள்வீர்கள். புதுத் தொழில் தொடங்குவீர்கள். எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். புதுமை நாள்.

**கன்னி**
பழைய இனிய சம்பவங்கள் நினைவுக்கு வரும். எதிர்ப்புகள் அடங்கும். வியாபாரத்தில் பங்குதாரர்கள் பிரச்னை தீரும். சக ஊழியர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். தேவைகள் பூர்த்தியாகும்.

**துலாம்**
குடும்பத்தினரின் எண்ணங்களை கேட்டு அறிந்து பூர்த்தி செய்வீர்கள். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள். உங்கள் கருத்துக்கு ஆதரவு பெருகும். தைரியம் கூடும் நாள்.

**விருட்சிகம்**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். பழைய பிரச்னைகள் தீரும். வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும். உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். மகிழ்ச்சியான நாள்.

**தனுசு**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் பிரச்னைகள் வந்து நீங்கும். யாருக்கும் பணம், நகை வாங்கித் தர வேண்டாம். வேலையாட்களால் விரயம் வரும். உத்தியோகத்தில் கவனம் செலுத்துவது நல்லது.

**மகரம்**
கணவன் - மனைவிக்குள் கருத்து மோதல்கள் வந்து நீங்கும். வியாபாரத்தில் வேலையாட்களை அனுசரித்துப் போங்கள். மேல் அதிகாரிகளுடன் விவாதம் வரக்கூடும். அதிகம் உழைக்கும் நாள்.

**கும்பம்**
குடும்பத்தாரின் ஆதரவு பிறக்கும். அரசால் அனுகூலம் உண்டு. வியாபாரம் தழைக்கும். புது ஒப்பந்தம் வரும். உத்தியோகத்தில் அதிகாரிகள் முக்கியத்துவம் தருவார்கள். புகழ், கௌரவம் கூடும்.

**மீனம்**
எதையும் தாங்கும் மனோபலம் கிடைக்கும். உங்களால் பயனடைந்தவர்கள் இப்பொழுது உங்களுக்கு உதவி செய்ய உங்களை நாடுவார்கள். தலைமையின் நம்பிக்கையை பெறுவீர்கள்.

# எம்.பிக்களின் வீடுகளை எரிப்பவர்களை சுடுமாறு உத்தரவிட்டார் கோட்டாபய!



## எஸ்.பி. திஸாநாயக்க பரபரப்பு தகவல்

**கொழும்பு, மே. 11**

**“பாராளுமன்ற உறுப்பினர்களின் வீடுகளின் எரியூட்டியவர்களை விரட்டுமாறும்-அவர்களைச் சுடுமாறும் கோட்டாபய ராஜபக்ஷ இராணுவத்துக்கு உத்தரவிட்டார். ஆனால், இராணுவ அதிகாரிகள் அந்த உத்தரவை ஏற்கவில்லை. இது தொடர்பில் நான் அறிந்த எல்லாவற்றையும் வெளியே சொல்லமாட்டேன்.”**

-இவ்வாறு பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

‘எம்.பிக்களின் வீடுகளை எரித்தவர்கள் யார், அமரக்கீர்த்தி அத்துகோரள எம்.பியைக் கொன்றவர்கள் யார்?’ என்று கேட்கப்பட்ட கேள்விகளுக்கு எஸ்.பி. திஸாநாயக்க எம்.பி. பதிலளிக்கையில்,

இரண்டையும் செய்தவர்கள் ஜே.வி.பியினர்தான் .நான் மட்டுமல்ல எல்லோரும் அவர்களைத்தான் சொல்கின்றார்கள். அவ்வாறு அட்டகாசம் புரிந்தவர்கள் பலர் ஜே.வி.பியின் உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் போட்டியிடுகின்றார்கள்.

அதுமட்டுமல்ல காலிமுகத் திடல் போராட்டத்தில் விடுதலைப் புலிகளும் கலந்துகொண்டனர். புலிகள் இன்னும் செயற்படுகின்றார்கள். மேலும், அடிப்படைவாத முஸ்லிம்களும் அங்கு இருந்தனர்.

கோட்டாபயவால் அவர்களை விரட்ட முடியாமல்போனது. 200 பேர் அளவில்தான் இருக்கின்றார்கள். அவர்களை விரட்டத் தேவை இல்லை என்று கோட்டாபய நினைத்தார். ஆனால், இறுதியில் நிலைமை மோசமானது.

கடந்த மே 9 ஆம் திகதி இரவு எம்.பிக்களின் வீடுகளின் எரியூட்டியவர்களை விரட்டுமாறும்-அவர்களைச் சுடுமாறும் கோட்டாபய இராணுவத்துக்கு உத்தரவிட்டார். ஒரு பைத்தியக்காரன்போல் எல்லாப் பக்கமும் தொலைபேசி அழைப்பு எடுத்து அவர் உத்தரவிட்டார். ஆனால், இராணுவ அதிகாரிகள் அந்த உத்தரவை ஏற்கவில்லை. இது தொடர்பில் நான் அறிந்த எல்லாவற்றையும் வெளியே சொல்லமாட்டேன்.

இறுதியாக கோட்டாபயவுக்கு ஆலோசனை வழங்கியவர்கள் யார்? அவரை வந்து சந்தித்த வெளிநாட்டு முக்கியஸ்தர்கள் யார்? அவரைப் பதவியை விட்டு ஓடுமாறு கூறியவர்கள் யார்? இதற்குப் பின்னால் உள்ள சதி என்ன? எல்லாம் எனக்குத் தெரியும். ஆனால், நான் எல்லாவற்றையும் சொல்லமாட்டேன்.

ஆனால், ரணில் விக்கிரமசிங்க சரியான முடிவை எடுத்தார். ஜனாதிபதியாகி மறுகணமே காலிமுகத் திடல் போராட்டக்காரர்களை விரட்டியடித்தார். அவர்தான் சரியான முடிவை எடுத்தார்.

ரணில் சரியான பாதையில் அரசைக் கொண்டு செல்கின்றார். அவரை நாம் ஜனாதிபதியாக நியமித்ததையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். அவர் சீனாவுடனும் உறவைப் பேணுகின்றார். இந்தியாவுடனும் உறவைப் பேணுகின்றார். அதேபோல், ஜப்பான், அமெரிக்கா, ஐரோப்பா உள்ளிட்ட அனைத்து நாடுகளையும் நட்பு வளையத்துக்குள் வைத்துள்ளார்-என்றார்.

(அ)

# தலைமன்னார்-தனுஸ்கோடி கப்பல் சேவை ஆரம்பிப்பதற்கு உடன் நடவடிக்கை தேவை

## சாள்ஸ் நிர்மலநாதன் எம்.பி. கோரிக்கை

கொழும்பு, மே. 11

தலைமன்னார் தனுஷ்கோடி கப்பல் சேவையை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியிடம் கோரிக்கை முன்வைத்தார்.

நேற்று முன்தினம் பாராளுமன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

யுத்தத்துக்கு முன்பு தலைமன்னார்-தனுஷ்கோடி கப்பல் போக்குவரத்துச் சேவை நடை



பெற்றது. அந்த நாட்களில் கொழும்பில் இருந்து தலைமன்னாருக்கு விசேட ரயில் சேவையும் இடம்பெற்றது.

தற்போது காரைக்கால் மற்றும் காங்கேசன்துறைக்கு இடையிலான கப்பல் சேவை நடைபெற இருப்பதாக செய்திகள் ஊடாக அறிந்தேன்.

காங்கேசன்துறைக்கும் காரைக்காலுக்கும் 56 கிலோ மீற்றர் தூரம். ஆனால் தலைமன்னாருக்கும் தனுஷ்கோடிக்கும் இடையிலாக 18 கிலோமீற்றர் தூரமே. ஆகவே தலைமன்னார் தனுஷ்கோடி கப்பல் சேவையை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் -என்றார்.

(அ)

# வடக்கு சுகாதார பணிப்பாளர் திலிப் லியனகே இடம்மாற்றம்

## வைத்தியர் சத்தியமூர்த்திக்கு மேலுமொரு பொறுப்பு

யாழ்ப்பாணம், மே. 11

வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் திலிப் லியனகே கொழும்பு சுகாதார அமைச்சுக்கு மாற்றப்பட்டுள்ளார்.

அவர் தனது கடமைகளை பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் நந்தகுமாரனிடம் கையளித்துவிட்டு கொழும்பு திரும்பினார்.

அவர் சுகாதார அமைச்சில் தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குபடுத்தல் பிரிவின் பணிப்பாளராக கடமையேற்றுள்ளார்.

தற்போது வெளிநாட்டுச் சுற்றுப் பயணத்திலிருக்கும் வைத்தியர் த. சத்தியமூர்த்தி நாடு திரும்பியதும் யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் பதவியுடன் வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளராகவும் பதவி ஏற்பார்.

இதேவேளை, வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பதவியுடன் நேற்றிலிருந்து கிளிநொச்சி சுகாதார சேவைகள் பணிப்பாளராகவும் வைத்தியர் மகேந்திரன் பதவியேற்றுக்கொண்டார்.

(அ)

# சந்தையில் சீனி விலை உயர்வு: அறிக்கை சமர்ப்பிக்க பணிப்பு



கொழும்பு, மே. 11

சந்தையில் சீனி விலை அதிகரிக்கப்பட்டமை தொடர்பில் வர்த்தக மற்றும் முதலீட்டு கொள்கைத் திணைக்களத்திடம் இருந்து அறிக்கை கோரப்பட்டுள்ளது.

நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய இதனை தெரிவித்தார்.

இலங்கை ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்துள்ள நிலையில் சீனியின் விலையை அதிகரிப்பதற்கு எந்த காரணமும் இல்லை என அவர் பாராளுமன்றத்தில் கூறினார்.

கோதுமை மாவுக்கு விதிக்கப்பட்டுள்ள புதிய சுங்க வரி காரணமாக கோதுமை மாவின் விலையை அதிகரிக்க முடியாது எனவும் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்தார்.

ரூபாய்க்கு நிகரான அமெரிக்க டொலரின் மதிப்பு 13 சதவீதம் குறைந்துள்ளது. அதேநேரம் உலக சந்தையில் கோதுமை மாவின் விலையும் 15 சதவீதம் குறைந்துள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

(அ)

# புத்தளத்தில் கடும் மழை 274 குடும்பங்கள் பாதிப்பு

கொழும்பு, மே. 11

தொடர்ச்சியாக பெய்துவரும் கடும் மழை காரணமாக புத்தளம் மாவட்டத்தில் நேற்று முன் தினம் மாலை வரை 274 குடும்பங்களைச் சேர்ந்த 1012 பேர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர் என புத்தளம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

முந்தல் பிரதேச செயலகத்திற்குட்பட்ட தாரக்குடிவில்லு மற்றும் புளிச்சாக்குளம் கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களும் மஹாகும்புக்கடவல பிரதேச செயலகத்திற்குட்பட்ட செம்புக்குளி மற்றும் அங்குனவில உள்ளிட்ட கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் கூறினார்.



அத்துடன், முந்தல் பிரதேசத்தில் தற்காலிக முகாம் ஒன்றும். அமைக்கப்பட்டுள்ளதுடன், அங்கு தங்க வைக்கப்பட்டிருக்கும் மக்களுக்கு தேவையான சமைத்த உணவு, குடிதண்ணீர் வசதி மற்றும் மருத்துவ சேவைகள் என்பன வழங்கப்பட்டு வருகின்றன.

முந்தல் பிரதேச செயலகத்துடன் இணைந்து முப்படையினரும், சுகாதாரப் பிரிவினரும், பிரதேச சபை உட்பட அரச சார்பற்ற நிறுவனங்களும் ஒன்றிணைந்து முகாமில் தங்கியுள்ள மக்களுக்கான உதவிகளைச் செய்து வருகின்றனர்.

(அ)

# ஆளுநர்கள் குறித்து தீர்மானிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கே உள்ளது

## சுட்டிக்காட்டுகின்றார் பந்துல

கொழும்பு, மே. 11

**ஆளுநர்கள் குறித்து தீர்மானங்களை எடுக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கே உள்ளது என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.**

வடமேல், கிழக்கு, சப்ரகமுவ மற்றும் வடக்கு மாகாண ஆளுநர்களைப் பதவி விலகுமாறு அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளதாக கடந்த வாரம் செய்திகள் வெளியாகியிருந்தன.

இவ்வாறு ஆளுநர்கள் பதவி விலகிய பின்னர் அந்த பதவிகளுக்கு ஐக்கிய தேசிய கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களே நியமிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதனை சாடும் வகையில், கடந்த சனிக்கிழமை திருகோணமலை பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றியுள்ள கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹாம்பத் , 'கிழக்கிலிருந்து ஆளுநராக உங்களைச் சந்திக்கும் இறுதி நாள் இதுவென்று எண்ணுகின்றேன்.' எனக் குறிப்பிட்டிருந்தார்.

அத்தோடு முன்னாள் அமைச்சர் நவீன் திஸாநாயக்கவும் புதிய ஆளுனர்கள் நியமிக்கப்படக் கூடும் என நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இந்நிலையில் இது தொடர்பில் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவிக்கையில்-

ஆளுநர்களின் நியமனம், பதவி நீக்கம் என்பன எம்முடன் தொடர்புடைய விடயமல்ல.



அவை முழுமையாக ஜனாதிபதிக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளவையாகும்.

ஆளுநர்கள் ஜனாதிபதியின் பிரதிநிதிகளாக நியமிக்கப்படுபவர்களாவர். எனவே அது குறித்த தீர்மானங்களை எடுப்பதற்கான முழுமையான உரிமையும் , அதிகாரமும் அவருக்கு மாத்திரமே காணப்படுகிறது- என்றார்.

(அ)

# மே 9 சம்பவத்தை மீண்டும் தோற்றுவிக்கவேண்டாம்!

## நளின் பண்டார கோரிக்கை

கொழும்பு, மே. 11

மே 09 சம்பவத்தை அரசாங்கம் குறிப்பாக பொதுஜன பெரமுன கேட்டு வாங்கிக்கொண்டதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

அத்துடன், நாட்டில் மீண்டும் மே 09 சம்பவத்தை தோற்றுவிக்க வேண்டாம் எனவும் அவர் கோரிக்கை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சண்டித்தனமாகச் செயற்பட்டால் நாட்டுக்கு எவ்வாறு வெளிநாட்டு முதலீட்டாளர்கள் வருகை தருவார்கள். இராஜாங்க அமைச்சரை பதவி நீக்கி முறையான விசாரணைகளை ஜனாதிபதி முன்னெடுக்க வேண்டும்.

மே 09 தினத்தன்று இவர்கள் இவ்வாறு சண்டித்தனமாக



செயற்பட்டார்கள்.மே 09 தின சம்பவத்தை அரசாங்கம் குறிப்பாக பொதுஜன பெரமுன கேட்டு வாங்கிக் கொண்டது.

இவ்விடயத்தில் நாட்டு மக்களை விமர்சிக்கவேண்டாம். அதிகாரத்தில் இருந்து கொண்டு மீண்டும் மே 09 சம்பவத்தை தோற்றுவிக்க வேண்டாம்-என்றார்.

(அ)

# ஐக்கிய மக்கள் சக்தி பக்கம் தாவும் மொட்டு எம்.பிக்கள்?

## சஜித்துடன் இரகசிய சந்திப்பு

கொழும்பு, மே. 11

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் அரசுடன் இணையப் போகின்றார்கள் என்று தொடர்ச்சியாகக் கூறப்பாடலும்கூட பொதுஜன பெரமுனவின் பக்கம் இருந்து 15 பேர் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணையவுள்ளனர் என்று தகவல்கள் கூறுகின்றன.

அவ்வாறு இணையவுள்ள 15 எம்.பிக்களில் நால்வருக்கும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் இடையில் இரகசிய சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

கொழும்பு - 07 இல் உள்ள இரு தரப்புக்கும் நன்கு பரிச்சயமான ஒருவரின் இல்லத்தில்தான் அந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

விரைவில் தேர்தல் ஒன்று இடம்பெறுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன என்றும், அதனையொட்டி அரசுக்குள் பல பிரச்னைகள் உருவாகியுள்ளன என்றும் அந்த நால்வரும் சஜித்திடம் கூறியுள்ளனர்.

15 பேரும் நேராக ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணையப் போகிறீர்களா அல்லது கூட்டணியாக இணையப் போகிறீர்களா என்று 15 பேரும் கூடிப் பேசி ஒரு முடிவை எடுங்கள் என்று அவர்களிடம் சஜித் தெரிவித்துள்ளார்.

ஒன்றரை மணிநேரம் இடம்பெற்ற இந்தச் சந்திப்பு இரவு விருந்துடன் நிறைவு பெற்றது. அடுத்த சந்திப்புக்கான திகதியும் இதன்போது தீர்மானிக்கப்பட்டது என்றும் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

(அ)

# முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் செயல்பாடு நேற்று கிளிநொச்சியில்

கிளிநொச்சி, மே. 11

வலி சுமந்த காலத்தில் உயிர் காத்த முள்ளிவாய்க்கால் கஞ்சியின் வரலாற்றை தொடர்ந்தும் இளைய சமூகத்தினருக்கு கடத்தும் நோக்கில் யாழ். பல்கலைக் கழக மாணவர்களால் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் செயற்திட்டம் வல்வெட்டித்துறை ஆலடிச் சந்தியில் நேற்று முன்தினம் காலை ஆரம்பிக்கப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக மக்கள் பங்களிப்புடன் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் செயற்திட்டம் யாழ்.பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தினரால் கிளிநொச்சியில் நேற்று நடத்தப்பட்டது.

நேற்று காலை 8:30 மணியளவில் கிளிநொச்சி கந்தசுவாமி கோவில் முன்றலில் வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினர், யாழ்.பல்கலை மாணவர்களுடன் இணைந்து பொதுமக்களும் முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சும் செயற்



பாட்டை மேற்கொண்டனர்.

பொதுமக்களின் வீடுகளுக்கு நேரடியாகச் சென்ற யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் ஒரு பிடி அரிசி மற்றும் இதர பொருட்களைச் சேகரித்தனர்.

அது மட்டுமன்றி முள்ளிவாய்க்கால் கஞ்சியை சிரட்டையில் வழங்கவேண்டும் என்ற நோக்கில் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள வீடுகளுக்குச் சென்று ஒவ்வொரு வீட்டிலும் சிரட்டை சேகரிக்கப்பட்டது.

சேகரிக்கப்பட்ட சிரட்டைகளை கஞ்சியை விட்டு பரிமாறுவதற்கு ஏற்ற வகையில் தயார் படுத்துவதற்கு யாழ்.பல்கலைக் கழக மாணவர்களுடன் இணைந்து கிளிநொச்சி வாழ் தாய்மார்களும் மிகவும் அர்ப்பணிப்புடன் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# போராட்டத்தில் ஈடுபட்டோரை கர்மவினை துரத்துகின்றதாம்!



கொழும்பு, மே. 11

காலிமுகத்திடலில் போராட்டம் நடத்தியவர்கள் மற்றும் தொடர்புபட்டிருந்தவர்களை கர்மவினை துரத்திக்கொண்டிருப்பதாகவும், இதனால் போராட்டக்காரர்களில் பலர் தொடர்ச்சியாக மரணித்து வருவதாகவும் முன்னாள் அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அதேவேளை, களுத்துறையில் சில நாட்களுக்கு முன்னர் 16 வயது சிறுமியொருவர் உயிரிழந்த சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர், காலிமுகத்திடல் போராட்டத்தின் பிரதான செயற்பாட்டாளர்களில் ஒருவராகச் செயல்பட்டவர் என்றும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

காலிமுகத்திடல் போராட்டத்தில் பல்வேறுபட்ட நபர்கள் செயற்பட்டனர். அங்கு கூடாரங்களை அமைத்து அவற்றுக்கு பல பெயரிட்டு பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். எனினும், அவர்கள் எமது எதிரியாக இருந்தாலும்கூட அவர்களுக்கு எந்த பாதிப்பு நடந்தாலும் அது தொடர்பாக மகிழ்ச்சியடையக் கூடாது. நமது பௌத்த நாட்டில் இயற்கையாக சில சம்பவங்கள் நடப்பதை அவதானிக்க முடிகிறது.

காலி முகத்திடல் ஆர்ப்பாட்டத்தில் பந்தங்கள் ஏந்தி மந்திரம் ஓதி செயற்பட்ட பூசாரி, மின்னல் தாக்குதலுக்குள்ளாகி இறந்துள்ளார்.

அதேபோன்று அங்கிருந்த நூலகத்துக்கு பொறுப்பாக இருந்தவர் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

வெசாக்கின்போது கறுப்பு நிறத்தில் வெசாக் கூடு செய்தவர், இப்போது பைத்தியக்கார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். இந்தப் போராட்டத்தில் முக்கியமான ஒருவர் தெஹிவளை பகுதியில் ரயிலில் மோதி உயிரிழந்துள்ளார். இன்னுமொருவர் நீரில் மூழ்கி இறந்துள்ளார்.

அதேவேளை மகிந்த ராஜபக்ஷவுக்கு மரண போஸ்டர் அச்சிட்டவர், லங்கா வைத்தியசாலையில் மரணித்துள்ளார். இது தான் கர்ம வினையால் கிடைப்பவை.

அதேவேளை, ஜனாதிபதியின் கொடியை திருடிச் சென்ற தொழிற்சங்கப் பிரதானி ஓட்டோ விபத்தில் தமது கால் ஒன்றை இழந்துள்ளார்.

அத்துக்கோரள எம்.பியின் கொலையுடன் தொடர்புடைய ஒருவர் சிறையில் உயிரிழந்துள்ளார். இவை இந்த ஒரு வருடத்திற்குள் நடந்தவை. கர்ம வினையின் பலன்களை இப்போது காணக்கூடியதாக உள்ளது-என்றார்.

(அ)

# ரணிலின் தலைமைத்துவம் பல வருடங்களுக்கு தேவை

## கூறுகிறார் செஹான் சேமசிங்க

கொழும்பு, மே. 11

**ஜனாதிபதி வேட்பாளர் குறித்து பொதுஜன பெரமுனவுக்குள் பரந்துபட்ட கலந்துரையாடல்கள் எவையும் முன்னெடுக்கப்படவில்லை. அத்தோடு குறுகிய காலத்துக்கன்றி, பல வருடங்களுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவம் நாட்டுக்கு மிக அவசியமாகும் என்று நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தன்மீது பாரிய விமர்சனங்களை முன்வைத்த தரப்பினரின் ஆதரவுடனேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றார்.

134 பாராளுமன்ற உறுப்பினர்கள் அவரை ஜனாதிபதியாக தெரிவு செய்வதற்காக வாக்களித்துள்ளனர். நாட்டில் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதற்கான தலைமைத்துவம் தொடர்பில் கொண்டிருந்த நம்பிக்கையின் காரணமாகவே அவர்கள் வாக்களித்தனர்.

பொருளாதார ரீதியில் நாட்டைக் கட்டியெழுப்பாவிட்டால் ஏற்படக் கூடிய விளைவுகள் தொடர்பில் சிந்தித்தே, வேறுபட்ட அரசியல் கொள்கைகளைக் கொண்டிருந்தாலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க தீர்மானித்தோம். அதற்கமைய அன்று காணப்பட்டதை விட இன்று நாடு படிப்படியாக முன்னேற்றமடைந்து வருகிறது.

நாட்டை மறுசீரமைப்பது மிகக் கடினம் என்று பலராலும் கூறப்பட்டதையே இன்று ஜனாதிபதி செய்துள்ளார். எனவே அவர் எண்ணும் பட்சத்தில் ஆளுநர்களை மாற்றுவதில் எவ்வித சிக்கலும் இல்லை.

அது பொதுஜன பெரமுனவுக்கும், ஜனாதிபதிக்குமிடையிலான இணக்கப்பாடாகக் கூட இருக்கலாம். அரசாங்கத்துக்குள்



கட்சி ரீதியில் நாம் பிளவடைந்து செயற்படவில்லை.

நாம் அரசாங்கத்துக்குள் ஒற்றுமையுடனேயே செயற்பட்டுக் கொண்டிருக்கின்றோம். எதிர்க்கட்சியினருக்கு எம்மில் பிளவினை ஏற்படுத்தவேண்டிய தேவை காணப்படலாம். எது எவ்வாறிருப்பினும் அரசியல் ஒற்றுமையை நாம் எந்த சந்தர்ப்பத்திலும் பாதுகாப்போம்.

பொதுஜன பெரமுனவின் தலைவராக முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவும், தேசிய அமைப்பாளராக முன்னாள் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவுமே செயற்படுகின்றனர். இந்நிலையில் பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக யாரைக் களமிறக்குவது என்பது குறித்த பரந்துபட்ட கலந்துரையாடல் எவையும் முன்னெடுக்கப்படவில்லை.

இது இவ்வாறிருக்க நாட்டை நெருக்கடி நிலைமையிலிருந்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே மீட்டுள்ளார். நாட்டை மீட்பதற்கான தலைமைத்துவத்தை வழங்கியது மாத்திரமின்றி, சர்வதேசத்தின் மத்தியில் இலங்கை தொடர்பான நம்பிக்கையை கட்டியெழுப்புவதற்கான வேலைத்திட்டங்களையும் அவரே முன்னெடுத்தார்.

எனவே அடுத்த ஆண்டு நாம் ஜனாதிபதித் தேர்தலுக்குச் சென்றால், அதனைத் தொடர்ந்து சர்வதேச நாணய நிதியம் உள்ளிட்டவற்றின் வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவமே அவசியமாகும். எனவே அவரது தலைமைத்துவத்தின் கீழ் இன்னும் பல ஆண்டுகள் நாடு நிர்வகிக்கப்படவேண்டும். இல்லையென்றால் இடைநடுவில் மீண்டும் சரிவை சந்திக்க நேரிடும்- என்றார். (அ)

# வெளிவிவகார அமைச்சின் கணினி பிரிவில் கோளாறு

## சேவைகள் மட்டுப்படுத்தல்

கொழும்பு, மே. 11

வெளிவிவகார அமைச்சின் தூதுரக சேவைப் பிரிவின் கணினிக் கட்டமைப்பில் ஏற்பட்டுள்ள கோளாறு காரணமாக, ஆவணங்களுக்கு அங்கீகாரமளிக்கும் சேவைகள் மறு அறிவித்தல்வரை மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

வெளிவிவகார அமைச்சு அறிக்கை ஒன்றின் மூலம் இதனை அறிவித்துள்ளது.

இதன்படி, கொழும்பில் உள்ள வெளிவிவகார அமைச்சின் தூதரக அலுவல்கள் பிரிவு மற்றும் யாழ்ப்பாணம், திருகோணமலை, மாத்தறை, கண்டி, குருநாகல் ஆகிய பிராந்திய அலுவலகங்களின் ஆவணங்களின் சரிபார்ப்பு மற்றும் சான்றளிப்புப் பிரிவுகளின் சேவைகள் மறு அறிவித்தல் வரும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

தற்போது, தூதரகப் பிரிவு மிகவும் அவசரமான ஆவணங்களுக்கு மாத்திரம் முன்னுரிமை வழங்கும் நிலையில், கணினிக் கட்டமைப்பு சீராக்கப்பட்டவுடன், ஏனைய ஆவணங்களுக்கான பணிகள் செயற்படுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், ஏனைய தூதரக சேவைகள் எந்தவித தடங்கலும் இன்றி தொடர்கின்றன.

இந்த நிலையில், பயனாளர்கள் தங்களுக்கான சேவைகள் குறித்து அறிந்துகொள்ள தொலைபேசி இலக்கங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

கொழும்பு 01 இல் உள்ள தூதரக விவகாரப் பிரிவு,
- 0112 338 812

பிராந்திய அலுவலகம், யாழ்ப்பாணம்
- 0212 215 972

பிராந்திய அலுவலகம், திருகோணமலை
- 0262 223 182 அல்லது இறுதி இரு இலக்கங்களுக்கு பதிலாக 86 இனை பயன்படுத்த முடியும்.

பிராந்திய அலுவலகம், கண்டி
- 0812 384 410

பிராந்திய அலுவலகம், குருநாகல்
- 0372 225 931 (அ)

# கடன் சீரமைப்பு கோரிக்கையை முன்வைத்துள்ளது இலங்கை அரசு

கொழும்பு, மே. 11

இருதரப்பு கடன் வழங்குநர் குழுவின் முதலாவது கூட்டத்தில், கடன் மறுசீரமைப்பு தொடர்பான கோரிக்கையை இலங்கை உத்தியோகபூர்வமாக முன்வைத்துள்ளதென பரிஸ் கிளப் அறிவித்துள்ளது.

நேற்று முன்தினம் இணைய வழி முறைமையில் இடம்பெற்ற கூட்டத்தில், 17 நாடுகள் உத்தியோகபூர்வ கடன் வழங்குநர் குழுவை உருவாக்கியுள்ளன.

இந்தியா, ஜப்பான் மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளின் இணைத்தலைமையில், கடன் மறுசீரமைப்புக்கான இலங்கை அதிகாரிகளின் கோரிக்கை இதன்போது ஆராயப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில், இலங்கை அதிகாரிகள் கலந்துகொண்டு கடன் மறுசீரமைப்புக்கான கோரிக்கையை முறைப்படி முன்வைத்ததாக பரிஸ் கிளப் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அதிகாரிகள், தங்களது அதிகாரபூர்வ இருதரப்பு கடனாளிகளுக்கு, மறுசீரமைப்பின் வெளிப்படைத்தன்மை மற்றும் ஒப்பீடு ஆகியவற்றுக்கான தங்கள் உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்தினர்.

சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கி பிரதிநிதிகள் இலங்கை தொடர்பான, அண்மைய நுண்பொருளாதார முன்னேற்றங்கள் மற்றும் இலங்கையுடனான தங்களது உறவின் தற்போதைய நிலைமை தொடர்பில் தெளிவுபடுத்தியுள்ளனர்.

அதேநேரம், சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட நிதி வசதி திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக இலங்கை நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதை குறித்த குழு வரவேற்றுள்ளதாக பரிஸ் கிளப் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இதேவேளை, இலங்கையின் கடன் வழங்குநர் நாடுகளுக்கு இடையில், இணையத்தள முறைமையில் நேற்று முன் தினம் இடம்பெற்ற முதலாவது சந்திப்பில், சீனா பார்வையாளர் நாடாக கலந்து கொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# 25,000 குடும்பங்களுக்கு இலவச சூரியப் படலம்!

கொழும்பு, மே. 11

குறைந்த வருமானம் பெறும் 25,000 குடும்பங்களுக்கு இலவச சூரியப் படலங்களை வழங்கும் நடவடிக்கை, அமைச்சரவையின் அனுமதியின் பிறகு தொடங்கப்படும் என்று நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்மூலம் 500 மெகாவோட் புதுப்பிக்கத்தக்க மின்சக்தியை தேசிய மின் கட்டமைக்கு சேர்க்க எதிர்பார்க்கப்படுவதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

இந்த திட்டம் இரண்டு கட்டங்களாக நடைமுறைப்படுத்தப்படவுள்ளதுடன், முதற்கட்டமாக 10,000 வீடுகளுக்கு சூரிய படலம் மூலம் மின்சாரம் வழங்கப்படவுள்ளதாகவும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க கூறினார்.

இரண்டாம் கட்டத்தின் கீழ் 15,000 வீடுகளுக்கு சூரியப்படலம் மூலம் மின்சாரம் வழங்கப்படும் என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க குறிப்பிட்டார். (அ)

# எலிக்காய்ச்சல் பரவல் கணிசமாக அதிகரிப்பு

கொழும்பு, மே. 11

எலிக் காய்ச்சலின் தாக்கம், தற்போது கணிசமாக அதிகரித்துள்ளதாக, இலங்கை மருத்துவச் சபை முன்னெடுச்சரிக்கை விடுத்துள்ளது.

கொழும்பில் நேற்று முன் தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில், அந்த சங்கத்தின் தொற்றுநோய் விஞ்ஞானப் பிரிவின் சமூகநல வைத்திய அதிகாரி குஷானி தாபரே இந்த முன்னெச்சரிக்கையை விடுத்தார்.

சிறுபோகம், இடம்பெறும் மார்ச் முதல் மே மாதம் வரையான காலப்பகுதியிலும், பெரும்போகம் இடம்பெறும் செப்ரெம்பர் முதல் டிசெம்பர் வரையான காலப்பகுதியில், எலிக் காய்ச்சலின் தாக்கம் அதிகரிக்கிறது.

எனவே, குறித்த காலப்பகுதியில், விவசாயிகளுக்கு, இது தொடர்பில் தெளிவுபடுத்தி, நோய் எதிர்ப்பு சக்தி மருந்துகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மருத்துவ ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதன் மூலம், எலிக் காய்ச்சல் பரவலில் இருந்து, பொதுமக்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள முடியும் என வைத்தியர் குஷானி தாபரேரா குறிப்பிட்டார். (அ)

# வைத்தியசாலைகளில் வழமைபோன்று கண் சத்திர சிகிச்சைகள் முன்னெடுப்பு

கொழும்பு, மே. 11

வழமைபோன்று அரச வைத்தியசாலைகளில் தற்போது கண் சத்திர சிகிச்சைகள் மேற்கொள்ளப்படுவதாக கண் வைத்திய நிபுணர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

நுவரெலியா வைத்தியசாலையில் கண் சத்திர சிகிச்சையின் பின்னர் நோயாளர்கள் பார்வையிழந்தமை தொடர்பில் விசாரணை நடத்தப்பட்டதாக அதன் தலைவர் விசேட வைத்திய நிபுணர் கபில பந்துதிலக தெரிவித்தார்.

அதன்படி, அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு பயன்படுத்தும் மருந்தில் ஒருவரை கிருமி இருப்பது உறுதி செய்யப்பட்டதாகவும் அவர் கூறினார்.

இதேபோன்றதொரு சம்பவம் கொழும்பு கண் வைத்தியசாலையிலும் பதிவாகியிருந்த நிலையில், குறித்த மருந்து பாவனையிலிருந்து மீளப் பெறப்பட்டது.

இதேவேளை, நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் இருந்து கண் சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட ஆறு நோயாளர்கள் கண்டி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டதாக நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் தெரிவித்தார். (அ)

# இம்ரான் கான்: கைது நடவடிக்கையால் முடங்கிய கப்டனின் அரசியல் பயணம்!

ஆரிப் ஷமீம்



பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான், ஊழல் புகார் தொடர்பாக தலைநகர் இஸ்லாமாபாத்தில் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டபோது வேறொரு வழக்கில் பொலிஸாரால் செவ்வாய்க்கிழமை (மே 9) கைது செய்யப்பட்டுள்ளார்.

தன்னை பாகிஸ்தான் ஆயுதப்படை ரேஞ்சர்கள் இழுத்துச் சென்றபோது, "இது அரசியல் உள்நோக்கம் கொண்ட செயல்" என்று இம்ரான் கான் தெரிவித்தார். அவரை குண்டு துளைக்காத கவச வாகனத்தில் ஏற்றி பொலிஸ் ரேஞ்சர்கள் பெயர் குறிப்பிடாத இடத்துக்கு அழைத்துச் சென்றுள்ளதாக தெரிகிறது.

2022ஆம் ஆண்டு ஏப்ரலில் பிரதமர் பதவியில் இருந்து நீக்கப்பட்ட இம்ரான் கான், அன்றிலிருந்து முன்கூட்டியே தேர்தல் பரப்புரையில் ஈடுபடுவதாகக் கூறி பல்வேறு பொதுக்கூட்டங்களில் தொடர்ச்சியாக பங்கேற்று வருகிறார்.

கடந்த ஆண்டு நவம்பரில் அவர் ஆளும் ஆட்சியாளர்களுக்கு எதிராக கண்டன பேரணி நடத்தியபோது நடந்த துப்பாக்கி சூட்டில் உயிர் பிழைத்தார்.

இந்நிலையில், கடந்த திங்கட்கிழமை, பணியில் உள்ள ஐஎஸ்ஐ உயரதிகாரியின் பெயரைக் குறிப்பிட்டு தன்னைக் கொல்ல அவர் சதி செய்வதாக இம்ரான் கான் குற்றம்சாட்டினார். அவரது கருத்து பொறுப்பற்றது மற்றும் அடிப்படையற்றது என்று பாகிஸ்தான் ராணுவம் தெரிவித்திருந்தது.

**இம்ரான் கானின் பயணம்**

இம்ரான் கான் ஒரு "க்ரௌட் புல்லர்", அதாவது கூட்டத்தை தன் பக்கம் இழுப்பவர் என்பதில் யாருக்காவது சந்தேகம் இருந்தால் அவர் பாகிஸ்தானின் அரசியலை நன்கு அறியாதவர் என்று பொருள்.

இம்ரான் கானுக்கு ஒரு பெரிய ரசிகர் பட்டாளம் உள்ளது. 1992ஆம் ஆண்டில் கிரிக்கெட் உலக கோப்பையை வென்றது முதல் 2022ல் தனது பாக்கெட்டில் இருந்து ஒரு கடிதத்தை எடுத்து அசைத்தது வரை, அந்த ரசிகர்கள் அவரது மாயாஜாலத்தால் ஈர்க்கப்பட்டுள்ளனர், அவரின் ஒரு குரலுக்காக ரசிகர்கள் காத்திருக்கின்றனர். "கேப்டன்" சொல்வதே உண்மை என்று நம்புகின்றனர்.

"நான் களத்தில் உறுதியாக நின்று கடைசி பந்து வரை விளையாடுவேன்," என்று கிரிக்கெட் பாஷையில் ஆட்சியை தக்க வைக்கும் உறுதியுடன் சில வாரங்களுக்கு முன்பு காணப்பட்டார் இம்ரான் கான். ஆனால், கடைசி பந்தில் 172 ரன்கள் எடுப்பது எப்படி சாத்தியமில்லையோ அப்படித்தான் முடிந்திருக்கிறது அவரது ஆளுகையின் கடைசி நாள்.

இம்ரான் கானின் கதையும் பெவிலியன் முதல் ஆடுகளம் வரையிலான கதையைப் போலவே உள்ளது.

அவருடன் விளையாடிய இன்னிங்ஸை ஒருபோதும் மறக்க முடியாத அளவுக்கு, தனது அரசியல் எதிரிகளுக்கு எதிராக அவர் சிக்ஸர்களை விளாசியுள்ளார்.

**கிரிக்கெட் மைதானம் மற்றும் அரசியல் மைதானம்**

இம்ரான் கான் பிரதான அரசியலில் நுழைந்தது ஒரு திடீர் நிகழ்வு அல்ல. இதற்காக பல ஆண்டுகள் காத்திருந்து கடுமையாக உழைத்ததாக அவர் குறிப்பிடுகிறார். 1987 உலகக் கோப்பைக்குப் பிறகு இம்ரான் கான் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற முடிவு செய்தபோது, அப்போதைய பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் ஜியா-உல்-ஹக், அவரை மீண்டும் கிரிக்கெட்டுக்குத் திரும்பச் சொன்னார். சில மாதங்களுக்குப் பிறகு இம்ரான் ஓய்வு பெறும் தனது முடிவை மாற்றிக்கொண்டார்.

இதேபோல், ஜெனரல் ஜியா, அவரை அரசியலில் சேருமாறு பின்னர் கேட்டுக் கொண்டார். ஆனால், இம்ரான் கான் அதை திட்டவட்டமாக மறுத்து விட்டார். பிரதமர் நவாஸ் ஷெரீப்பும் இதேபோன்ற அழைப்பை விடுத்தார். ஆனால், அரசியலில் சேருவதில்லை என்ற தனது முடிவில் கேப்டன் உறுதியாக இருந்தார். ஆனால், இறுதியில் இம்ரான் கான் அரசியலில் காலடி எடுத்து வைத்தார்.

முப்படை உளவு அமைப்பு ஐஎஸ்ஐயின் முன்னாள் தலைவரான ஜெனரல் ஹமீத் குல்லின் ஜிஹாதி சித்தாந்தத்தை இம்ரான் கான் விரும்பினார். அவருக்கு வாய்ப்பு கிடைத்ததும், ஜெனரல் ஹமீத் குல் மற்றும் முகமது அலி துரானியின் சமூகக் கருத்தியலின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட "பாஸ்பான்" என்ற அமைப்பில் இம்ரான் சேர்ந்தார். ஹமீத் குல் மற்றும் முகமது அலி துரானியும், இதை ஒரு "மூன்றாவது சக்தி" என்று அழைத்தனர். அரசியல்வாதிகள் தங்கள் சொந்த லாபங்களுக்காக நாட்டை சூறையாடுகிறார்கள் மற்றும் அவர்களின் பரஸ்பர சண்டையில் மக்கள் நசுக்கப்படுகின்றனர் என்பதால், இது பாகிஸ்தானுக்கு மிகவும் தேவையான ஒன்று என்று அவர்கள் நினைத்தனர்.

அரசியலை விட சமூக மாற்றத்திற்கான முதல் படி இது என்று பாஸ்பான் அமைப்பின் நிறுவனர்கள் குறிப்பிட்டனர். பல ஆண்டுகளுக்குப் பிறகு இம்ரானின் மாற்றத்தின் சுனாமி அலையில் இது மேலெழும்பி வந்தது.



பாகிஸ்தானின் ஐஎஸ்ஐ முன்னாள் தலைவர் ஹமீத் குல்லின் திட்டவட்டமான யோசனைகள், ஜமாத்-இ-இஸ்லாமில் இருந்து வந்த துரானியின் சிறந்த நிர்வாகத் திறமை மற்றும் உலகக் கோப்பை ஹீரோ இம்ரான் கானின் கவர்ச்சியான ஆளுமை ஆகியவற்றை தன்னுள் கொண்டுள்ள இது, மிகவும் பயனுள்ள "முயற்சி"யாக இருந் தது. இந்த அமைப்பும், அதன் இரு தலைவர்களும் இம்ரானின் அரசியல் சித்தாந்தத்தின் முதிர்ச்சியில் பெரும் செல்வாக்கு செலுத்தினார்கள்.

பல ஆண்டுகளுக்குப் பிறகு, ஜெனரல் முஷாரப்பும் இம்ரானுடன் நெருக்கமாகிவிட்டார். இம்ரான் அவருடன் ஏறக்குறைய இணைவதாக இருந்தார். பிடிஐ தலைவர், கட்சியின் செயல்திறனை விட அதிக இடங்களைக் கேட்டார் என்று ஜெனரல் முஷாரப் குறிப்பிட்டார்.

**புற்றுநோய் மருத்துவமனை**

பாகிஸ்தானில் அப்துல் சத்தார் ஈதிக்குப் பிறகு இம்ரான் கான் சந்தேகத்திற்கு இடமின்றி மக்கள் நலப்பணிகளை மேற்கொண்ட மிக முக்கியமான ஒருவராக கருதப்படுகிறார். அவர் தனது தாயின் பெயரிடப்பட்ட ஷௌகத் கானம் புற்றுநோய் மருத்துவமனையின் மூலம் பாகிஸ்தானின் பெரும்பாலான மக்களுக்கு சேவை செய்துவருகிறார்.

ஆனால், இங்கும் "பாஸ்பான்" அமைப்பின் பங்களிப்பை குறிப்பிட வேண்டும். முகமது அலி துரானி, ஜமாத் ஆர்வலர்கள் மற்றும் வணிக சமூகத்துடனான தனது தொடர்புகளைப் பயன்படுத்தி இம்ரான் கானுக்காக பெரும் நிதி திரட்டினார்.

அத்தகைய ஒரு நிதி திரட்டும் நிகழ்வில் இம்ரான் கான், கோடீஸ்வர தொழிலதிபர் அப்துல் ஹலிம் கானை சந்தித்தார். அவர் அதே இடத்தில் ஷௌகத் கானம் மருத்துவமனைக்கு 6 கோடி ரூபாயை நன்கொடையாக அறிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் பிடிஐ கட்சியின் செய்திகளை எழுதும் டான் நாளேட்டின் பத்திரிகையாளர் மன்சூர் மல்லிக்கும் இருந்தார். "பிடிஐ உருவாவதற்கு முன்பு, இம்ரான் கானின் மிகப்பெரிய திட்டம் ஷௌகத் கானம் புற்றுநோய் மருத்துவமனையை அமைப்பதுதான். அதற்காக இம்ரான் இரவும் பகலும் உழைத்தார், ஷௌகத் கானம் மருத்துவமனை திட்டம் பாகிஸ்தான் மக்களிடமிருந்து அவருக்கு பேராதரவை பெற்றுத்தந்தது. இளைஞர்கள், பெண்கள், வணிக வகுப்பினருடன் கூடவே பின்னர் பாகிஸ்தான் தெஹ்ரீக்-இ-இன்சாப்பின் "ஏடிஎம்" என அழைக்கப்படும் ஹலிம் கானும் அதில் சேர்ந்தார்," என்று அவர் குறிப்பிட்டார்.

ஹலிம் கான் அளித்த நன்கொடை மற்றும் சேவையின் காரணமாக, லாகூரில் உள்ள ஷௌகத் கானம் மருத்துவமனையின் மூன்றாவது மாடியில் உள்ள ஒரு வார்டுக்கு அவரது தந்தை அப்துல் ரஹீம் கானின் பெயரும், பெஷாவரில் உள்ள ஷௌகத் கானம் மருத்துவமனையில் உள்ள ஒரு மாடிக்கு அவரது தாய் நசீம் கானின் பெயரும் சூட்டப்பட்டது. ஹலிம் கான் "அப்துல் ஹலிம் கான் அறக்கட்டளை"யின் கீழ் தொண்டு மற்றும் நலப் பணிகளைச் செய்து வந்தார்.

ஷௌகத் கானம் நினைவு புற்றுநோய் ஆராய்ச்சி மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையம் 1994 ஆம் ஆண்டு டிசம்பர் 29 ஆம் தேதி திறக்கப்பட்டது. இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு 1996, ஏப்ரல் 25 ஆம் தேதி இம்ரான் கான் தனது சொந்த அரசியல் கட்சியான பாகிஸ்தான் தெஹ்ரீக்-இ-இன்சாப்ஐ நிறுவினார். அதன் அறிக்கை "பாஸ்பான்" அமைப்பின் சித்தாந்தங்களின் அடிப்படையில் அமைந்திருந்தது.



இதில் "இஸ்லாமிய நலன்புரி அரசை நிறுவுதல், பொறுப்புக் கூறல் மற்றும் நீதியுடன் கூடிய சமுதாயத்தை உருவாக்குதல்" என்ற முழக்கம் முதன்மையானதாக இருந்தது. ஆரம்பத்தில் இது "ஒன் மேன் ஷோ" என்று அழைக்கப்பட்டாலும், பின்னர் பலர் இந்த அணியில் சேர்ந்தனர்.

கட்சி 1996 இல் உருவாக்கப்பட்டாலும், அதன் பெரிய அளவிலான செயல்திறனை 2011 இல் பார்க்க முடிந்தது. கட்சியின் முதல் பெரிய பேரணி நவம்பர் 30 அன்று லாகூரில் உள்ள மினார்-இ-பாகிஸ்தானில் நடைபெற்றது என்று மன்சூர் மல்லிக் கூறினார்.

ஒத்த கருத்தியல் கொண்டவர்கள் அதில் இணைந்தனர். 2002 தேர்தலில் பிடிஐ, ஒரு இடத்தில் மட்டுமே வெற்றி பெற்றது. இம்ரான் கான் மியான்வாலி தொகுதியில் வெற்றி பெற்றார். பின்னர் 2013 தேர்தல் வந்தது. அந்த நேரத்தில், பிடிஐ தனது வேட்பாளர்கள் யார், யார் பணத்தை செலவிடுவார்கள், யாரால் முடியும், யாரால் முடியாது என்று அடிமட்ட அளவில் தன்னை ஒழுங்கமைக்கத் தொடங்கியது.

**கட்சி உருவானவுடன் தொடங்கிய பிளவு**

பாகிஸ்தான் தெஹ்ரீக்-இ-இன்சாப் (பி.டி.ஐ) கிளர்ச்சி உறுப்பினர்கள் மற்றும் கூட்டாளிகளின் அதிருப்தி பற்றி இந்த நேரத்தில் முக்கியமாக பேசப்படுகிறது. கிளர்ச்சியாளர்கள், சில சமயங்களில் "தேச துரோகிகள்" என்று அழைக்கப்படுகின்றனர். சில சமயங்களில் ஊழல் குற்றச்சாட்டுக்கும் ஆளாகின்றனர். ஆனால், பிடிஐயில் இது முதல் முறையாக நடக்கிறதா? அது உண்மையல்ல. கட்சி உருவாக்கப்பட்டு தேர்தலில் பங்கேற்றது முதல், கட்சியின் பல்வேறு குழுக்கள் கோபமடைந்துள்ளன. பலர் கட்சியை விட்டு வெளியேறியுள்ளனர்.

1996 ஆம் ஆண்டு தனது அரசியல் கட்சியை இம்ரான் கான் தொடங்கியபோது, 11 வீரர்கள் கொண்ட கிரிக்கெட் அணிக்கு கேப்டனாக இருப்பதிலும், தேசிய அளவில் அரசியல் கட்சியை நடத்துவதிலும் உள்ள வித்தியாசம் அவருக்கு ஒருவேளை தெரியாமல் இருந்திருக்கலாம்.

அவருக்கு மிக அருகில் வருபவர் சில காலம் கழித்து அவரிடமிருந்து விலகிச் செல்வதும் இம்ரான் கானின் ஆளுமையில் அடங்கும் என்று கூறப்படுகிறது. ஹமீத் கான் முதல் ஓய்வுபெற்ற நீதிபதி வஜிஹூதீன் வரையிலும், ஜஹாங்கீர் கான் முதல் ஹலிம் கான் வரையில், பிடிஐயில் கோபமடைந்த உறுப்பினர்களின் பட்டியல் மிக நீளமானது.

பெரும்பாலும் இம்ரான் கானின் சொந்த முடிவுகளே இந்த நிலைக்குக் காரணம். உதாரணமாக, 2013 தேர்தலுக்கு முன்னதாக, அடிமட்ட நிலையில் அமைப்பை வலுப்படுத்த "நியமனம் செய்வதற்குப் பதிலாக, தேர்ந்தெடுக்கப்பட்டவர்களைக் கொண்டு வர வேண்டும்" என்று திடீரென முடிவு செய்யப்பட்டது. இது கட்சியின் அடிப்படைக் கொள்கைகளை மீறுவதாகும்.

2018 ஆம் ஆண்டு வந்தவுடன் இம்ரான் கான் தான் முன்பு நம்பாத "ஸ்தாபனத்துடன்" (ராணுவம்) கைகோர்த்தார். பிறகு ஸ்தாபனம் அவருக்கு ஆட்களை அளிக்கத் தொடங்கியது.

"கட்சியில் மீண்டும் சர்ச்சை ஆரம்பமானது. கட்சிக்காரர்களுக்கு சீட்டு கிடைக்கவில்லை, வெளியில் இருந்து வருபவர்களுக்கு கட்சியின் டிக்கெட் கிடைக்கிறது. இதற்கு மிகப்பெரிய உதாரணம் உஸ்மான் பஸ்தார். முஸ்லீம் லீக்-கியூ மற்றும் பாகிஸ்தான் முஸ்லிம் லீக்-(நவாஸ்)ல் முன்பு இருந்த அவர், பிடிஐயில் சேர்க்கப்பட்டு முதலமைச்சராக்கப்பட்டது கட்சி உறுப்பினர்களை கோபப்படுத்தியது. ஆனால் இம்ரான் உறுதியாக நின்றார்."

2018 தேர்தலில் பாகிஸ்தான் டெஹ்ரீக் இ இன்சாஃப் கட்சி, நாடாளுமன்றத்தில் 116 இடங்களை வென்றது. பாகிஸ்தான் வரலாற்றில் ஐந்து தொகுதிகளில் போட்டியிட்டு அனைத்திலும் வெற்றி பெற்ற முதல் அரசியல்வாதியாக இம்ரான் கான் ஆனார்.

இந்த வெற்றிக்குப் பிறகு இம்ரான் கான் ஆற்றிய உரையில், தனது வருங்கால அரசின் தொலைநோக்குப் பார்வையை முன்வைத்து, நாட்டை முழு நலன்புரி நாடாக மாற்ற விரும்புவதாகவும், மதீனா அரசின் கொள்கைகளின் அடிப்படையில் அதை நடத்த விரும்புவதாகவும் கூறினார்.

**இஸ்லாமியம் மற்றும் தேசியவாதம்**

இம்ரான் கான் பாகிஸ்தானை மதீனா ஆட்சிமுறையில் பார்க்க விரும்புகிறார். ஆனால் அவர் ஸ்காண்டிநேவிய பொதுநல கட்டமைப்புகள், பிரிட்டிஷ் மற்றும் அமெரிக்க ஜனநாயகங்கள் மற்றும் சீனா பாணி அதிகார அமைப்பு ஆகியவற்றையும் எதிர்பார்க்கிறார்.

அதே நேரத்தில், துருக்கியின் ரிசெப் தயீப் எர்துவான் மற்றும் மலேசியாவின் மஹாதிர் முகமது ஆகியோரின் உதாரணத்தைக் காட்டி, அவர்களைப்போன்ற தலைமையையும் விரும்புகிறார். சர்வாதிகாரம், ஜனநாயகம், பாசிசம் மற்றும் இஸ்லாமிய விழுமியங் கள் என்று எல்லாமே இதில் இருப்பதால், இது கடினம் மட்டுமல்ல, சாத்தியமற்றது என்று அரசியல் படிக்கும் எந்தவொரு மாணவருக் கும் தெரியும். அவை அனைத்தும் ஒரு காந்தத்தின் ஒத்த முனைக ளைப் போல ஒன்றையொன்று விலக்கித்தள்ளுகின்றன.

ஆனால் இம்ரானுக்கு இவை பற்றிய தனிப்பட்ட கண்ணோட்டம் இருக்கலாம். இவை அனைத்திலிருந்தும் சில விஷயங்களை அவர் தேர்ந்தெடுத்துக்கொள்ள நினைக்கலாம் அல்லது இவற்றை ஒரே விஷயமாக அவர் கருதலாம்.

இம்ரான் கானின் அமெரிக்கா பற்றிய கொள்கை மற்றும் அறிக்கையைப் புரிந்து கொள்ள, வரலாற்று பின்னணியைப் பார்க்க வேண்டும் என்று இஸ்லாமாபாத்தில் உள்ள காய்த்-இ-ஆசாம் பல்கலைக்கழகத்தின் அரசியல் மற்றும் சர்வதேச உறவுகள் பள்ளியின் உதவிப் பேராசிரியர் டாக்டர் சையத் கந்தீல் அப்பாஸ் கூறினார்.

2014ல் அப்போதைய பிரதமர் நவாஸ் ஷெரீப்புக்கு எதிராக இம்ரான் கான் வீதியில் இறங்கி, தனக்கு ஆதரவாக இருக்கும் இளைய தலைமுறையின் சுனாமி, "ஊழல்" அரசியல்வாதிகளை அழித்துவிடும் என்று கூறியபோது, சுனாமிக்குப் பிறகு அழிவின் அதிகப்படியான அழுக்குகள் வெளிவரும் என்பதையும், அதை ஒன்று திரட்டுவது மிகவும் கடினம் என்பதையும் பலர் உணரவில்லை. இம்ரானின் சுனாமியிலும் இதேபோலத்தான் நடந்தது.

இம்ரானை யார் எதிர்த்தாலும், இம்ரான் கானின் ஆதரவாளர்களும், இம்ரானும் அவர்களை மிகவும் மோசமான வார்த்தைகளால் சாடுவார்கள். இன்று கட்சியில் அவருக்குப் பிடித்தமானவர் ஒருவர் இருந்து, நாளை அவர் இம்ரானை விமர்சித்தால் அவர் "துரோகி" என்றும் "விலை போனவர்" என்றும் அழைக்கப்படுவார். இங்கு கருத்து வேறுபாடுகளுக்கு இடமில்லை. இதுதான் பிடிஐயின் மிகப்பெரிய பின்னடைவாகத் தெரிகிறது.

**இம்ரான் கான் ஒரு அரசியல்வாதியா?**

இம்ரான் கான் எப்போதுமே அரசியல்வாதிகளை மோசமான வார்த்தைகளால் வர்ணிப்பார். சில சமயங்களில் நாடாளுமன்றத்தையும் பொருட்படுத்துவதில்லை. சில நேரங்களில் பாகிஸ்தானின் நிறுவனர் முகமது அலி ஜின்னாவைத் தவிர கடந்த கால அரசியல்வாதிகள் யாரும் நாட்டுக்கு விசுவாசமாக இருப்பதாகக் கருதுவதில்லை.

இதற்குக் காரணம் இம்ரான் ஒரு அரசியல் வாதி அல்ல என்று ஃபரா ஜியா கூறுகிறார். "அவரது பயிற்சி அப்படி இருக்கவில்லை. "தான் ஒரு அரசியல் மாணவன்" என்று தனது உரைகளில் அவர் சொல்ல முயற்சிக்கிறார். ஆனால் உண்மையில் அவர் அரசியல் மாணவன் அல்ல. அவர் ஒரு கிரிக்கெட் வீரர், அதுவும் ஓய்வு பெற்ற வீரர். அவர் கடந்த காலத்தில் மட்டுமே வாழ்கிறார். அரசியலானது கொடுக்கல் வாங்கல் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டிருப்பதால், அதற்கு நெகிழ்வுத்தன்மை அதிகம் தேவைப்படுகிறது. அது இம்ரான் கானிடம் இல்லாத ஒன்று. "காப்பாற்ற வந்தவர்" என்று தன்னைக்கருதும் நபர் அவர்," என்கிறார் ஃபரா ஜியா.

காபாற்ற வந்தவரோ, கிரிக்கெட் வீரரோ அல்லது அரசியல்வாதியோ, இம்ரான் தனது இரண்டாவது இன்னிங்ஸில் தற்காப்பு வியூகத்தை கடக்க கடைசி வரை போராடினார். ஆனால், அவர் போராடித்தோற்றார் (நம்பிக்கை இல்லா தீர்மானம் மீதான வாக்கெடுப்பில் 2022, ஏப்ரல் 10ஆம் தேதி தோல்வி அடைந்தார்) என்றே அவரை நன்கு அறிந்தவர்கள் கூறுகின்றனர்.

# சுற்றுலாத்துறையும் பன்மைத்துவமும்

குமாரசிங்கம் கோகுலன்

நாம் செல்கின்ற சுற்றுலா தளங்களிலே சிறு கொட்டகைகளிலும், கைகளிலும் பல்வேறு பொருட்களை வைத்துக்கொண்டு கூவி, கூவி தங்கள் பொருட்களை விற்பனை செய்துவரும் ஒரு சிறு வியாபாரிகள் கூட்டத்தை எல்லோரும் கடந்து சென்றிருப்பீர்கள். ஒரு நேர உணவுக்காக இவர்கள் சிந்தும் வியர்வை துளிகள் அதிகமாவே இருக்கும். யுத்தம், கோவிட் தொற்று, பொருளாதார நெருக்கடி காலங்களில் இவர்களின் வாழ்க்கையின் வலிநிறைந்த பக்கங்களும், இவர்கள் எந்த இனத்தினராக இருந்தாலும் ஏனைய இனத்தவர்களுடனான அவர்களின் சமாதான பன்மைத்துவமும் சற்றே வித்தியாசமானது.

தெற்காசிய நாடுகளில் சுற்றுலாத்துறைக்கு பெயர் பெற்ற நாடுகளில் இலங்கை முக்கிய இடத்தை வகிக்கின்றது. நாட்டின் மொத்த அந்நியச் செலாவணி வரவில் 13 முதல் 15 சதவிகிதம் வரையிலான பங்களிப்பை சுற்றுலாத்துறை வழங்கிவரும் நிலையில், தற்போதைய பொருளாதார நிலைமை காரணமாகவும் சுற்றுலாத்துறை பெரும் வீழ்ச்சியடைந்துள்ளது. இதனால் சுற்றுலாத்தளங்களில் சிறு தொழிலை மேற்கொள்ளும் வியாபாரிகள் மிக மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர்.

இலங்கையில் இந்துக்களும் பௌத்தர்களும் ஒரே வரிசையில் நின்று இறைவனை வணங்கும் ஒரே இடம் எதுவென்றால் நாம் முதலில் கதிர்காமம் முருகன் ஆலயம் தான். மொனராகலை மாவட்டத்திலுள்ள கதிர்காமம் ஆலயம் பழம்பெரும் காலத்திலிருந்தே சிங்களவர், தமிழர் இடையே அழிக்க முடியாத பந்தத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்த ஆலய சூழலில் பல்லின சமூகத்தினரும் சிறு வியாபார நிலையங்களை நடத்துவதை தமது வாழ்வாதாரமாகக் கொண்டிருக்கிறார்கள். தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள் என மூவினத்தவர்களும் இன, மத பேதமின்றி பன்மைத்துவத்துடன் வாழும் இந்தப் பகுதி வரலாற்று மூலாதாரமாகவும், சுற்றுலாத்துறைக்கு பெயர்போன இடமாகவும் விளங்குகின்றது. எனினும், சமகால பொருளாதார நெருக்கடி அவர்களையும் விட்டுவைக்கவில்லை.

'தொதல் செய்வதற்கான உள்ளீடுகளின் விலையேற்றம் காரணமாக 500 ரூபாவாக இருந்த தொதலை 900 ரூபாய்க்கு விற்பனை செய்கிறோம். இதனால் தற்போது எங்களது வியாபாரமானது சரி பாதியாக குறைவடைந்துள்ளது' என்கிறார் தொதல் வியாபாரத்தில் ஈடுபடும் சிங்களவரான திலான்.

தற்போதைய பொருளாதார நெருக்கடியிலும் தனது 18 வயதுடைய மாற்றுத்திறனாளியான மகன் மற்றும் இம்முறை உயர்தர பரீட்சைக்கு தோற்றவுள்ள மகள் ஆகியோர் அவரின் குடும்பத்தில் இருக்கிறார்கள்

கதிர்காமம் என்றால் முருகன் எவ்வளவு பிரசித்தமோ அதுபோல் கறுப்பு (களு) தொதலும் மிகவும் பிரசித்தமானது. இங்கு வரும் சுற்றுலாப்பயணிகள் தொதலை வாங்காமல் செல்வது அரிதாகும். தொதல் வியாபாரத்தை 15 வருடங்களாக மேற்கொண்டு வரும் திலான், தற்போது இவ்வியாபாரம் உட்பட ஏனைய பல சுற்றுலாவை மையப்படுத்திய பல வியாபரங்களின் நிலை அபாய நிலையில் உள்ளது - என்கிறார்.

கடந்த 30 வருடங்களாக இடம்பெற்ற உள்நாட்டு யுத்த காலத்திலே இந்த இன, மத பன்மைத்துவம் கேள்விக்குள்ளாக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக தமிழ் - சிங்கள இனங்களுக்கிடையில் விரோதமான போக்கே காணப்பட்டது. 2009 மே மாதம், உள்நாட்டு யுத்தம் முற்றுப்பெற்ற பின்னரான காலப்பகுதியில் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் வடக்கு மற்றும் தெற்கை நோக்கி சுற்றுலாக்களை மேற்கொண்டிருந்ததுடன், அரசாங்கத்தால் இரு இனங்களுக்கு இடையிலான சமாதான நல்லினக்க செயல்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டன. அத்துடன், வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் வருகையும் அதிகரித்திருந்தது.

இவ்வாறான நடவடிக்கையின் ஊடாக இனங்களிடையிலான மொழி, கலாசாரம், பண்பாடுகள் மற்றும் தங்களின் வாழ்வியலை ஒருவருக்கு ஒருவர் அறிந்து கொள்வதுடன், சமாதான பன்மைத்துவத்தை ஏற்படுத்த ஏதுவானதாக சுற்றுலாத் தளங்கள் மாறின. இதன் காரணமாக முக்கிய சுற்றுலா பகுதிகளில் குறிப்பிட்ட இனத்தவர்கள் மட்டுமே வியாபார நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்த நிலைமை மாறியதுடன், ஏனைய இனத்தவர்களும் தங்களின் சிறிய மற்றும் நடுத்தர வியாபார



நடவடிக்கைகளையும் முன்னெடுக்க வாய்ப்பாகவும் அமைந்தது. இப்போது தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களும் தலதா மாளிகை போன்ற பகுதிகளில் வியாபாரங்களில் ஈடுபடுவதை அவதானிக்க முடிகிறது.

எனினும், பல்லின சமூகமும் வாழும் இடமாக திருகோணமலை மாவட்டத்தில் இந்த நிலை கேள்விக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது. இங்கே பல சுற்றுலா தளங்கள் காணப்பட்டாலும்கூட கன்னியா வெந்நீரூற்று சமய, சமூக வரலாற்று ரீதியாக மிகவும் முக்கியமான இடமாகக் காணப்படுகின்றது.

இதனை சூழ 96 சிங்களவர், 04 தமிழர்கள், 02 முஸ்லிம் இனத்தவர்கள் என 102 பேர் சிறுவியாபார நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். இந்துத் தமிழர்களின் வரலாற்று ஆலயமாகவும் - பகுதியாகவும் அடையாளம் கொண்டுள்ள கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை மாவட்டத்திலுள்ள திருக்கோணேச்சரம் தொடர்பான அண்மைக்காலங்களில் ஏற்பட்ட சர்ச்சை மற்றும் நில உரிமைப் போராட்டங்கள் இங்கு வாழக்கூடிய சிங்கள - தமிழ் மக்களின் நல்லுறவில் சற்று விரிசலை ஏற்படுத்தியுள்ளமை கோடிட்டுக்காட்டப்பட வேண்டியதொன்றாகும்.

'இராணுவத்தால் சுடப்பட்டு எனது கணவர் இறந்ததுடன், மகனையும் பறிகொடுத்த நிலையில் எனது மகளுடன் வாழ்ந்து வருகின்றேன். கோவிட் பெருந்தொற்றால் சாப்பாட்டுக்கே வழியில்லாத நிலையும் ஏற்பட்டது. ஆரம்பத்தில் 5,000 ரூபாய் தொடக்கம் 6,000 வரை நாளாந்த வருமானத்தை பெற்ற போதும், தற்போது 500 தொடக்கம் 1000 ரூபாய் வரையே கிடைக்கின்றது. சில நாட்களில் எந்த வருமானத்தையும் பெறவில்லை. எனது மருத்துவ செலவிற்கே பல ஆயிரம் ரூபாய் பணம் தேவை. தற்போதைய நிலையில் அதற்கும் வழியில்லாமல் உள்ளது' என்று புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் அங்கு வியாபாரம் செய்துவரும் பெண் கவலைப்படுகிறார்.

இங்கு எம்முடன் சிங்களம் மற்றும் முஸ்லிம் நண்பர்களும் இவ்வியாபார நடவடிக்கையில் ஈடுபடுவதுடன் வியாபார நடவடிக்கையின் போது வாடிக்கையாளருடன் கதைப்பதற்கு மொழி தடையாக இருக்கும் போது எமக்கு இவர்கள் உதவுகின்றனர். அதேபோல் நாமும் அவர்களுக்கு உதவுகின்றோம் - என்கிறார்.

சுற்றுலாத்துறையும் பன்மைத்துவ சமூக வியாபர நடவடிக்கையும் படிப்படியாக வளர்ச்சி பெற்றதுடன், இலங்கை வரலாற்றிலேயே சுற்றுலாத்துறை மூலம் அதிகளவிலான வருமானம் கிடைத்த ஆண்டாக 2018ஆம் ஆண்டு பதிவாகியிருந்தது. அந்த ஆண்டு 4,380.6 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானம் கிடைத்ததாக மத்திய வங்கி அறிக்கை கூறுகிறது.

இந்த வளர்ச்சி நிலையானது 2019 ஏப்ரல் 21 ஆம் திகதி இடம்பெற்ற ஈஸ்டர் குண்டு தாக்குதலின் காரணமாக ஒரு வருடத்திலே சுற்றுலாத்துறையின் வருமானம் 3.6 பில்லியன் டொலர்களாக குறைந்தது. இவ்வாறு முடங்கிய சுற்றுலாத்துறையானது ஆறு மாதங்களுக்கு பிறகுதான் படிப்படியாக மீளத்தொடங்கியது.

மீள் வளர்ச்சி படிப்படியாக அதிகரித்து வந்த நிலையில் கொரோனா பொது முடக்கம் காரணமாக மீண்டும் இலங்கை சுற்றுலாத்துறையை மாத்திரம் இல்லாமல் முழு உலக சுற்றுலா நடவடிக்கையும் முடங்கியது. இதன் காரணமாக 2020இல் 8 மாதங்கள் சர்வதேச விமான சேவை முடக்கப்பட்டதுடன், அந்த ஆண்டு வெறும் 5 இலட்சம் பேர் மட்டுமே சுற்றுலா - ஏனைய பயணத்துக்காக இலங்கை வந்தனர். இது இவ்வாறு இருக்க 2020இலும் பார்க்க 2021இல் நிலைமை இன்னும் மோசமானது. கொரோனா அச்சம் காரணமாக இரண்டு இலட்சம் பேரே இலங்கை வந்தனர்.

கொரோனா தொற்றால் ஏற்பட்ட பாதிப்பில் இருந்து மீண்டு நாட்டின் பொருளாதாரம் மற்றும் சுற்றுலா துறை மெல்ல மெல்ல நிமிர ஆரம்பித்தபோது, 2022ஆம் ஆண்டு நாட்டின் பொருளாதார நெருக்கடியால் இலங்கையின் அனைத்து துறைகளும் மிக வேகமாக மீண்டும் வீழ்ச்சி அடைந்தன. இதன் காரணமாக இந்தத் துறையில் நேரடியாகவும் மறைமுகமாகவும் ஈடுபட்டு வரும் ஹோட்டல் துறையினர், வாகன ஓட்டுனர்கள், பயண வழிகாட்டிகள், பயண எற்பாட்டாளர்கள், சுற்றுலா தளங்களிலே சிறு வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் என 30 இலட்சம் பேர் வரை பாதிப்படைந்தனர்.

'கணவரால் கைவிடப்பட்ட நிலையில் மட்டக்களப்பு பாசிக்குடாவில் சிறு வியாபாரத்தை மேற்கொண்டு வருகின்றேன். கோவிட் தொற்று காலத்தில் வெற்றிலை மற்றும் சர்பத் விற்பனையை வீட்டில் வைத்து செய்தேன். ஒருநாளைக்கு ஆயிரம் ரூபாய் மட்டுமே வருமானம் ஈட்ட முடிந்தது. சில நேரங்களிலும் அதுவும் இல்லை. எனது தொழிலை ஆரம்பிக்கும் காலத்தில் ஈஸ்டர் குண்டு தாக்குதல் சம்பவத்தால் எனது வியாபாரம் பெரும் பாதிப்புக்குள்ளானது. மேலும், அக்காலப்பகுதியில் முஸ்லிம்களை பார்க்கும்போது ஒரு வித அச்சநிலை காணப்பட்டது' என சமாதான பன்மைத்துவம் கேள்விக்குள்ளான விடயத்துடன், சமகால பொருளாதார நெருக்கடியின் தாக்கம் குறித்தும் மட்டக்களப்பைச் சேர்ந்த செ. சந்திரவதனி கூறுகிறார். இந்நிலையில் தமது கிராம சேவகர் பிரிவில் சமய நல்லிணக்கம் தொடர்பாக பல நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டது. இதன் ஊடாக தனது அச்ச உணர்வு நீங்கியதாகவும் அவர் தெரிவித்தார்.

சிறுவியாபாரிகள் எதிர்கொள்ளும் பிரச்னைகளைத் தீர்க்கும் வழி குறித்து வவுனியா பல்கலைக்கழகத்தின் வியாபார கற்கைகள் பீடத்தின் பீடாதிபதி கலாநிதி யோ. நந்தகோபனிடம் நாம் வினவியபோது,

'உற்பத்திக்கான மூலப்பொருட்கள் கிடைக்காமை, குறித்த பிரதேசங்களில் பெரிய வியாபாரிகளுடன் போட்டிபோட முடியாத நிலைமை, கல்வி அறிவு குறைந்தவர்களாக இருப்பதனால் சுற்றுலாப்பயணிகளுக்கு தேவையான பொருட்கள் எது என்பதை தெரிவு செய்ய முடியாமை, மற்றும் மொழி அறிவு போன்றவை காரணமாக சிறுவியாபரிகள் பெரும் சவாலுக்கு முகம் கொடுக்கின்றனர். இந்த வியாபார நடவடிக்கையில் ஈடுபடுபவர்களுக்கு அரசாங்கத்தால் தேவையான பயிற்சிகள், சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான பொருட்களை கொள்வனவு செய்வதற்குரிய உதவிகள் மற்றும் சலுகைகளை வழங்குவதன் ஊடாக இவர்களின் வியாபாரத்தை விரிவுபடுத்த முடியும்' - என்றார்.

நாட்டில் சுற்றுலாத்துறை வீழ்ச்சியால் பெரும் பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ள அதனை நம்பி தொழில் முயற்சியில் ஈடுபடும் விளிம்புநிலை வியாபாரிகளின் வாழ்வாதாரம் கேள்விக்கு உள்ளாகியுள்ள நிலையில், பொருளாதார வறுமை பன்மைத்துவமாக மக்கள் ஒன்று சேர்ந்து வாழும் நிலையையும் கேள்விக்கு உள்ளாக்கிவிடும் என்ற அச்சமும் எழாமலில்லை.

பொருளாதார வீழ்ச்சியால் முதலில் வீழும் துறையாக சுற்றுலாத்துறை இருப்பதுடன் இறுதியாக மீண்டெழும் துறையாகவும் இத்துறையே காணப்படுகிறது. முக்கிய சுற்றுலாத்தலங்களிலே மூவின மக்களும் இணைந்து வியாபார நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர். இவ்வாறு வியாபார நடவடிக்கையில் ஈடுபடுபவர்களுக்கு குறிப்பிட்ட பருவ காலங்களில் மட்டுமே அதிகளவான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகமாக இருக்கின்றது. மேலும் ஏனைய காலங்களில் அவர்களின் வருமானம் என்பது கேள்விக்குறியாக உள்ளது. எனவே, அவர்களின் வியாபார நடவடிக்கை உரிய மாற்றத்துக்கு உள்ளாக வேண்டும்.

சிறு வியாபாரிகளின் வியாபார நடவடிக்கைக்கு, மானிய முறையிலோ அல்லது குறைந்த வட்டியிலான கடனையோ அரசாங்கம் வழங்க வேண்டும். அத்துடன் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு சுற்றுலாப்பயணிகளை ஈர்ப்பதற்கான நிகழ்வுகளை ஒழுங்குபடுத்துதல், கல்விச் சுற்றுலாக்கள் போன்ற பல்வேறு சுற்றுலாக்களை ஊக்கப்படுத்துதலின் ஊடாக தமது வியாபாரத்தை முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியும் என்பது சுற்றுலாத்துறை சார் சிறுவியாபாரிகளின் எதிர்பார்ப்பாகும்.

மேலும், ஓர் இனமோ அல்லது சமூகத்தினரோ, வேறு இனமோ அல்லது சமூகமோ வாழும் இடங்களில் உள்ள சுற்றுலாத்தளங்களுக்கு பயணிப்பதன் ஊடாக அவர்களின் பண்பாடு, கலாசாரம் என்பன பரிமாற்றிக்கொள்ளப்படுவதால், சிறந்த பன்மைத்துவமான சமூகத்தையும் கட்டியெழுப்ப முடியும் என்பதே நிதர்சனம்.

*களுத்துறை மாணவி மரணம்:*

## கைதாகிய பிரதான சந்தேக நபரை தடுத்துவைத்து விசாரிக்க அனுமதி

*கொழும்பு, மே. 11*

களுத்துறையில் 16 வயது சிறுமி உயிரிழந்த சம்பவத்துடன் தொடர்புடைய 29 வயதான பிரதான சந்தேகநபரை 48 மணிநேரம் தடுத்து வைத்து விசாரணை நடத்த பொலிஸாருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

களுத்துறை விடுதி ஒன்றின் மூன்றாவது மாடியில் இருந்து விழுந்து பாடசாலை மாணவி உயிரிழந்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட பிரதான சந்தேகநபர் நேற்று களுத்துறை நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இதேவேளை, உயிரிழந்த மாணவியின் கையடக்கத் தொலைபேசிக்கு வந்த அழைப்புகள் தொடர்பிலும் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அத்துடன், விடுதியின் மூன்றாவது மாடியில் இருந்து குதித்து குறித்த மாணவி தற்கொலை செய்துகொண்டதாக சந்தேகநபர் வாக்குமூலம் அளித்ததாக விசாரணைகளை முன்னெடுக்கும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தன்னுடன் இருந்தபோது அவருக்கு பல தொலைபேசி அழைப்புகள் வந்ததாகவும் அதன் பின்னர் அவர் அந்த விபரீத முடிவை எடுத்ததாகவும் சந்தேக நபர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், சந்தேக நபரின் வாக்குமூலத்தில் சந்தேகம் ஏற்பட்டுள்ளதால், பல கோணங்களில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் உயர் அதிகாரி ஒருவர் கூறினார். (அ)

## காட்டுப் பகுதியில் மாணவிகளை துஷ்பிரயோகம் செய்த ஆசிரியர்!

*கொழும்பு, மே. 11*

களுத்துறையில் ஆசிரியர் ஒருவர் 16 மாணவிகளை பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளதாக தமக்கு பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கணிதம் கற்பிக்கும் குறித்த ஆசிரியர் தற்போது பிரதேசத்தை விட்டு தப்பிச் சென்றுள்ளதாகவும், ஆசிரியரைக் கண்டுபிடிக்க பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

களுத்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இரண்டு பொலிஸ் நிலையங்களுக்கு நேற்று முன் தினம் மாலை வரை பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

குறித்த மாணவிகளை வகுப்பறையில் வைத்து பாலியல் துஷ்பிரயோகம் செய்ததுடன், மாணவிகளை வீட்டில் இறக்கி விடுவதாக தெரிவித்து களுத்துறை லாகோஸ்வத்த பகுதியில் உள்ள காட்டுப் பகுதிக்கு தனது காரில் அழைத்துச் சென்று பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கியுள்ளமையும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

மேலும், சூம் தொழில்நுட்பம் மூலம் மாணவிகளுக்கு வகுப்புகள் நடத்த இணைப்புகள் அனுப்பப்பட்டுள்ளதாகவும், பெற்றோர் இல்லாத நேரத்தில் ஆடைகளை அகற்றுமாறு அச்சுறுத்தி, அவற்றை தனது கைத்தொலைபேசியிலும் அவர் பதிவு செய்துள்ளதாகவும் கூறப்படுகின்றது.

குற்றஞ்சாட்டப்பட்ட ஆசிரியர் தனது மடிக்கணினியில் அனைத்து காணொளிகளையும் சேமித்து வைத்திருந்ததை அவரது மனைவி கண்டுபிடித்து, மாணவிகளின் பெற்றோருக்குத் தெரிவித்ததைத் தொடர்ந்து பெற்றோர் முறைப்பாடு செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு துஷ்பிரயோகத்திற்கு உள்ளானவர்களில் களுத்துறை பகுதி பொலிஸ் நிலைய அதிகாரி ஒருவரின் மகளும் உள்ளடங்கியுள்ளதாகவும் அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் களுத்துறை பொலிஸ் பிரிவு குற்றத்தடுப்பு அதிகாரிகள் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)

## எக்ஸ் பிரஸ் கப்பல் விவகாரத்தால் ஒத்திவைக்கப்பட்ட பாராளுமன்றம்!

*கொழும்பு, மே 11*

"எக்ஸ்பிரஸ் பேர்ள் அனர்த்தம்" தொடர்பான பாராளுமன்ற விவாதத் தின்போது நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ எழுப்பிய ஒழுங்குப் பிரச்னை காரணமாக சபை 10 நிமிடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டது.

எக்ஸ்பிரஸ் பேர்ள் சம்பவம் தொடர்பில் நீதி மன்றத்தில் வழக்கு விசாரணைகள் நடைபெற்று வரும் நிலையில் இந்த விவாதம் சட்டவிரோதமானது என நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தான் இந்த விவா தத்தில் கலந்து கொள்ளப் போவதில்லை என்றார்.

இதை தொடர்ந்து பாராளுமன்றத்தில் பெரும் அமளிதுமளி ஏற்பட்டது.

கட்சித் தலைவர்களின் கூட்டத்தைக் கூட்டி தீர்மானம் எடுப்பதற்காக சபை 10 நிமிடங்களுக்கு ஒத்திவைக்கப்படுவதாக சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன அறிவித்தார். (ஐ)

## தேசிய பாதுகாப்பு மாநாடு வரும் 17இல் நடைபெறும்!

*கொழும்பு, மே 11*

"தேசிய பாதுகாப்பு மாநாடு 2023" எதிர்வரும் 17ஆம் திகதி சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் கீழ் இயங்கும் தேசிய பாதுகாப்பு குறித்த முதன்மையான சிந்தனைக் குழுவான இலங்கையின் தேசிய பாதுகாப்பு ஆய்வுகள் நிறுவனம் மூன்றாவது முறையாக இந்த மாநாட்டை ஏற்பாடு செய்துள்ளது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்து கொள்ளவுள்ளார்.

இந்த மாநாட்டில் இராணுவ அதிகாரிகள், சட்ட அமுலாக்க அதிகாரிகள், ஆராய்ச்சியாளர்கள், கல்வியாளர்கள், சிந்தனையாளர்கள் மற்றும் சிரேஷ்ட வல்லுநர்கள் ஆகியோர் கலந்து கொண்டு மூன்று கருப்பொருள் துறைகளில் தங்கள் முன்னோக்குகளை பகிர்ந்து கொள்வர் என்று பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (ஐ)






# ஆறு வீடுகளில் திருட்டு; சிறுவனுடன் 6 பேர் கைது

மட்டக்களப்பு, மே. 11

**மட்டக்களப்பு - கொக்குவில் மற்றும் மட்டு. தலைமையக பொலிஸ் பிரிவுகளிலுள்ள பிரதேசத்தில் பூட்டியிருந்த 6 வீடுகளை உடைத்து அங்கிருந்து பணம், தங்க நகைகள், மடிக்கணினி மற்றும் மின் உபகரணங்களைத் திருடி வந்த 14 வயதுச் சிறுவனுடன் இருவரையும் திருட்டுப் பொருட்களை வாங்கிய கடை முதலாளிகள் நால்வர் என 6 பேரை கைது செய்துள்ளதுடன் திருடப்பட்ட பொருட்களை மீட்டுள்ளதாக கொக்குவில் பொலிஸார் தெரிவித்தனர்.**



கொக்குவில் பொலிஸ் பிரிவிலுள்ள பனிச்சையடி பிரதேசத்தில் கடந்த முதலாம் திகதி தொடக்கம் 4ஆம் திகதிவரை அந்த பிரதேசத்தில் தொடர்ச்சியாக பூட்டியிருந்த 4 வீடுகளின் கூரை மற்றும் ஜன்னல் கதவுகளை உடைத்து அங்கிருந்த 4 மடிக்கணினி, கையடக்கத் தொலைபேசிகள், தங்க ஆபரணங்கள் மற்றும் பெறுமதியான மின்சார உபகரணங்கள் திருட்டுப்போயுள்ளன.

இது தொடர்பாக கொக்குவில் பொலிஸ் நிலையப் பெரும் குற்றத்தடுப்பு பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் பி.சசீந்திராவுக்கு கிடைத்த தகவலையடுத்து, மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எதிரிமானவின் ஆலோசனைக்கமைய, பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஏ.கே.யு.பி. விமலரத்தினவின் வழிகாட்டலில், சம்பவதினமான திங்கட்கிழமை பெரும் குற்றத்தடுப்பு பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸார் கொக்குவில் பொலிஸ் நிலையத்தை அண்மித்த பகுதியைச் சேர்ந்த 14 வயதுச் சிறுவன் மற்றும் 25 வயது இளைஞனை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் மேற்கொண்ட விசாரணையில் குறித்த நான்கு வீட்டை உடைத்து திருடியதுடன், மட்டக்களப்பு நகர் கண்ணகையம்மன் 7 குறுக்கு வீதியிலுள்ள பூட்டியிருந்த வீடு ஒன்றை கடந்த 5ஆம் திகதி உடைத்து, அங்கிருந்து ஒரு பவுண் தங்கச் சங்கிலி, 3 தோடுகள், கையடக்கத் தொலைபேசிகள் திருடியதுடன், பார் வீதியிலுள்ள வீடொன்றில் இருந்து மரம் வெட்டும் மின்சார உபகரணம் மற்றும் மின்சார உபகரணங்களை திருடியதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து திருடிய பொருட்களை மீட்டதுடன், திருடிய மடிக்கணினி, தண்ணீர் மோட்டர் மற்றும் தங்க நகைகளை வாங்கிய காத்தான்குடி, சத்துருக்கொண்டான், கொக்குவில் பிரதேசங்களைச் சேர்ந்த கையடக்க தொலைபேசி விற்பனை நிலையம், பழைய இருப்பு விற்பனை நிலையம் மற்றும் நகைக்கடை போன்ற கடை முதலாளிகள் 4 பேரை திருட்டுப் பொருளை வாங்கிய குற்றச்சாட்டில் பொலிஸார் கைது செய்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்வர்களை, மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஆஜர்படுத்தியபோது, திருட்டில் ஈடுபட்ட 14 வயதுச் சிறுவனையும் இளைஞனையும் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறும் திருட்டுப் பொருட்களை வாங்கிய கடை முதலாளிகளை பிணையில் விடுவிக்கிமாறும் நீதிவான் உத்தரவிட்டார்.

(அ)

## கல்முனை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட சிறுவர்,பெண்கள் அபிவிருத்திக் குழுக்கூட்டம்



அக்கரைப்பற்று, மே. 11

கல்முனை பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட சிறுவர் மற்றும் பெண்களின் பிரச்னை தொடர்பில் ஆராயும் முதலாவது காலாண்டுக்கான பிரதேச மட்ட சிறுவர் மற்றும் பெண்களின் அபிவிருத்தி குழு கூட்டம் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று சிறப்பாக நடைபெற்றது.

இவ்அபிவிருத்தி குழுக் கூட்டம் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம் மற்றும் பாதிக்கப்பட்ட பெண்கள் அரங்கம் நிதி அனுசரணையில் சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் ஏ.கே.காமிலா, மகளீர் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி. ஜெனிதா பிரதீபன் ஆகியோரின் ஏற்பாட்டில் கல்முனை பிரதேச செயலாளர் ஜெ.லியாகத் அலி வழிகாட்டலில் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எம். ஜஃபர் தலைமையில் நெறிப்படுத்தப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் பிரதேச மட்ட சிறுவர் அபிவிருத்தி, சிறுவர் , பெண்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் மற்றும் சவால்கள் பால்நிலை சார் வன்முறைகளை குறைப்பதற்கான செயற்திட்டங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டு பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(அ)

## கிழக்கு மாகாணப் பாடசாலையில் முதல் தடவை மும்மொழிக் கதம்பம்

மட்டக்களப்பு, மே. 11

மட்டக்களப்பு மண்முனை மேற்கு கல்வி வலயத்திற்குட்பட்ட தாண்டியடி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் கிழக்கு மாகாணத்தின் பாடசாலைகளில் முதன் முறையாக மும்மொழிக் கதம்ப நிகழ்வு பாடசாலையின் அதிபர் தி.பத்மசுதன் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் மட்டக்களப்பு மேற்கு பிரதிக்கல்விப் பணிப்பாளர் எஸ்.மகேந்திரகுமார் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டதுடன் மண்முனை மேற்கு கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.முருகேசப்பிள்ளை, பாடசாலை மேம்பாட்டு இணைப்பாளர் கே.சிறிபிரேமசாயிசிவம், ஏயூலங்கா நிறுவனத்தின் திட்ட இணைப்பாளர் ஏ.அனுலா, தமிழ் பாட ஆசிரிய ஆலோசகர் பி.சதீஸ்குமார், ஆங்கிலம் வளவாளர் ஜி.ஜூட்ஸ்குமார், சிங்கள பாட ஆசிரிய ஆலோசகர் எம்.மாணிக்கவாசகம், ஆசிரிய ஆலோசகர் (ஆலோசனை வழிகாட்டல்) ரி.குணரெத்தினம், மண்முனை மேற்கு பிரதேச இளைஞர் கழகங்களின் சம்மேளனத் தலைவர் ம.சதீஸ்குமார் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.



கிழக்கு மாகாணத்தில் இதுவரை எங்குமே நடந்திராத வகையில் மட்டக்களப்பு மண்முனை மேற்கு கல்வி வலயத்திற்குட்பட்ட தாண்டியடி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் வழிகாட்டல் பொறுப்பாசிரியர் ரோஜா ரமணி இருதயநாதன் ஒழுங்கமைப்பில் இடம்பெற்ற இந் நிகழ்வில் தமிழ், சிங்கள, ஆங்கில மொழிகளில் ஒரே நேரத்தில் போட்டிகள் நடத்தப்பட்டு இப் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்கள் பரிசில் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். இந் நிகழ்வில் மாணவர்களின் மும்மொழியிலான பல்வேறு வகையான கலைப்படைப்புகளும் அரங்கேற்றப்பட்டன. (அ)

## திருமலையில் மினி சூறாவளி



திருமலை, மே. 11

திருகோணமலை மாவட்டத்தின் பல பகுதிகளில் நேற்று முன்தினம் மாலை வீசிய மினி சூறாவளியுடன்கூடிய மழையினால் பல்வேறு வீடுகள் பகுதியளவில் சேதமானதுடன், மின்சாரமும் துண்டிக்கப்பட்டது.

தம்பலகாமம் பிரதேச செயலகப் பகுதியில் உள்ள பட்டிமேடு, புதுக்குடியிருப்பு, குன்சப்பந் திடல் உள்ளிட்ட பல வீடுகளும் பயன்தரு மரங்களும் சேதமாகியதாக மக்கள் தெரிவித்தனர்.

அத்துடன், இரு மணித்தியாலயங்களுக்கும் அதிகமான நேரம் மின்சாரம் தடைப்பட்டதாகவும் மக்கள் கூறினர்.

தென்னை, வாழை மற்றும் பலா உள்ளிட்ட மரங்கள் முறிந்து வீட்டுக்கூரை உட்பட வீதியோரங்களிலும் சேதம் ஏற்பட்டது.

(அ)

## பாலமுனை பிரதேச வைத்தியசாலையில் ஆய்வுகூடம், சமையலறை திறந்துவைப்பு

அக்கரைப்பற்று, மே. 11

பாலமுனை பிரதேச வைத்தியசாலையில் மீள் புனரமைப்பு செய்யப்பட்ட வைத்திய ஆய்வு கூடம் மற்றும் சமையலறை என்பன கடந்த திங்கட்கிழமை திறப்புவிழா செய்யப்பட்டதோடு குறித்த ஆய்வு கூடத்தை கல்முனை பிராந்தியத்திற்குரிய தனித்துவமானதும் பிரதானதுமான ஆய்வுகூடமாக மாற்றுவதற்கான திட்ட யோசனையும் கல்முனை பிராந்திய சுகாதாரப் பணிப்பாளரால் மாகாண மற்றும் மத்திய அமைச்சின் சுகாதாரப் பிரிவுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது

குறித்த ஆய்வுகூடத்திற்கு பிரதேச மக்களினதும், அபிவிருத்தி குழுவினதும் அளப்பரிய பங்களிப்பு கிடைக்கப் பெற்றுள்ளதுடன் வைத்தியசாலையின் நலன் விரும்பிகளால் அன்பளிப்புச் செய்யப்பட்ட பொருட்களாலும் வைத்தியசாலையின் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் பங்களிப்புடன் நிர்மாணிக்கப்பட்ட வாகன தரிப்பிடமும் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டது.




பாலமுனை பிரதேச வைத்தியசாலையின் பிரதேச வைத்திய அதிகாரி எம்.ஜே நௌபல் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வுகளில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ எல் எம் றிபாஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.


(அ)

# இம்ரான் கான் கைதானதை அடுத்து பாகிஸ்தானில் வெடித்தது கலவரம்!

## பொலிஸார் - ஆதரவாளர்கள் மோதல்

**இஸ்லாமாபாத், மே. 11**

**பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் கைது செய்யப்பட்டதையடுத்து, அவரின் ஆதரவாளர்கள் நேற்று முன் தினம் நாடு முழுவதும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.**



இஸ்லாமாபாத், பெஷாவர் மற்றும் பல இடங்களில் வீதிகளை மறித்து ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

கராச்சி, லாகூரில் ஆர்ப்பாட்டக்காரர்களை கலைப்பதற்கு பொலிஸார், கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரைப் பிரயோகம் மேற்கொண்டனர்.

இம்ரான் கானின் கைதுக்கு எதிராக பல மனுக்களை கட்சியின் சட்டத்தரணிகள் தாக்கல் செய்யவுள்ளனர் என பி.ரி.ஐ கட்சியின் உப தலைவர் ஷா மெஹ்மூத் குரேஷி தெரிவித்துள்ளார். (அ)

ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் மோதல்களும் ஏற்பட்டன. இதனால் குறைந்தபட்சம் இருவர் பலியாகினர் என உள்ளூர் ஊடகங்கள் தெரிவித்துள்ளன. பல வாகனங்கள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

முன்னாள் பிரதமரும் பி.ரி.ஐ கட்சியின் தலைவருமான இம்ரான் கானுக்கு எதிராக பல வழக்குகள் பதிவுசெய்யப்பட்ட நிலையில், முன்பிணை கோருவதற்காக, இஸ்லாமாபாத் மேல் நீதிமன்றத்துக்கு இம்ரான் கான் செவ்வாய்க்கிழமை சென்றிருந்த நிலையில், துணை இராணுவப் படையினரால் இம்ரான் கான் கைது செய்யப்பட்டார்.

அல் காதிர் நம்பிக்கை நிதியம் தொடர்பான லஞ்சக் குற்றச்சாட்டு வழக்கில் இம்ரான் கான் கைது செய்யப்பட்டுள்ளார் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சில ஆர்ப்பாட்டக்காரர்கள் இராணுவத்துக்கு எதிராக கோஷங்களை எழுப்பினர். லாகூரில் படைத் தளபதியின் வாசஸ்தலம் மற்றும் ராவல்பிண்டியிலுள்ள இராணுவத் தலைமையகம் ஆகியவற்றுக்கு முன்னாலும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

# டிரம்ப் பாலியல் குற்றவாளி! நீதிமன்றம் அதிரடித் தீர்ப்பு



நியூயோர்க், மே. 11

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டொனாலட் டிரம்ப் பாலியல் வன்முறையில் ஈடுபட்டார் என நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

1990 களில் நியூயோர்க்கின் பல்பொருள் அங்காடியில் பத்தி எழுத்தாளர் ஒருவரை டிரம்ப் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தினார் என நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

பேர்க்டோவ் குட்மனின் ஆடை மாற்றும் அறையில் டிரம்ப் ஈ ஜீன் கரோலை பாலியல்வன்முறைக்கு உட்படுத்தினார் என நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

பாதிக்கப்பட்ட நபர் தன்மீது சுமத்திய குற்றச்சாட்டுகள் பொய் என தெரிவித்தமைக்காக டிரம்பிற்கு எதிராக அவதூறு வழக்கினை தாக்கல் செய்யலாம் என நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

பாலியல் குற்றச்சாட்டுகள் தொடர்பில் டிரம்ப் குற்றவாளி என நீதிமன்றம் அறிவித்துள்ளமை இதுவே முதல் தடவை.

இன்று உலகிற்கு உண்மை தெரியவந்துள்ளது என ருவிட்டரில் ஈ ஜீன் கரோல் பதிவிட்டுள்ளார்.

இது எனக்கு மாத்திரம் வெற்றியல்ல பாதிக்கப்பட்டவர் தெரிவித்ததை நம்பாததால் துயரை அனுபவித்த ஒவ்வொரு பெண்ணிற்கும் இந்த தீர்ப்பு ஒரு வெற்றி என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ருவிட்டரில் அறிமுகமாகும் குரல், வீடியோ அழைப்பு!

நியூயோர்க், மே. 11

உலகின் முன்னணி பணக்காரர்களில் ஒருவரான எலான் மஸ்க் கடந்தாண்டு ஒக்ரோபரில் 44 பில்லியன் டொலருக்கு ருவிட்டரை விலைக்கு வாங்கினார். அதனை தொடர்ந்து ருவிட்டரில் பல்வேறு மாற்றங்களை எலான் மஸ்க் ஏற்படுத்தி வருகிறார்.

ருவிட்டரில் விரைவில் குரல் மற்றும் வீடியோ அழைப்பு வசதியை அறிமுகம் செய்யவுள்ளதாக எலான் மஸ்க் அறிவித்துள்ளார்.

டெஸ்லா, ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனங்களின் உரிமையாளரான எலான் மஸ்க் 4,400 கோடி டொலரில் ருவிட்டர் நிறுவனத்தை கையகப்படுத்தியதையடுத்து, கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் அதன் தலைமைச் செயல் அதிகாரியாகவும் பொறுப்பேற்றார். இதைத் தொடர்ந்து பணியாளர்கள் நீக்கம், பதிவிடும் முறையில் நவீனமயமாக்கம், ருவிட்டர் ப்ளூ டிக்கிற்கு கட்டணம் உள்ளிட்ட அவரது அதிரடி நடவடிக்கைகள் சர்ச்சைக்குள்ளாகின.

இந்நிலையில், ருவிட்டரில் விரைவில் குரல் மற்றும் வீடியோ அழைப்பு வசதியை அறிமுகம் செய்யவுள்ளதாக எலான் மஸ்க் அறிவித்துள்ளார்.

ருவிட்டரில் தொலைபேசி இலக்கம் இல்லாமல்




ஓடியோ, வீடியோ அழைப்பு பேசும் வசதியை அந்நிறுவனம் கொண்டு வருகின்றது.

ருவிட்டர் நிறுவனத்தை எலான் மஸ்க் விலைக்கு வாங்கியதில் இருந்து, இதனை லாபகரமாக மாற்றுவதற்கான பணிகளில் மும்முரமாக ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (அ)

# யூத ஆலயத்தில் துப்பாக்கிச் சூடு

## துனிசியாவில் நால்வர் பலி! 11 பேர் காயம்!!




துனிஸ், மே. 11

துனிசியாவிலுள்ள யூத தேவாலயமொன்றில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் யாத்திரிகர்கள் உட்பட மூவர் உயிரிழந்துள்ளனர். தாக்குதல் நடத்திய நபரும் உயிரிழந்துள்ளார்.

ஆபிரிக்க நாடான துனீஷியாவின் ஜேர்பா தீவிலுள்ள காரிபா எனும் யூத தேவாலயத்தில் நேற்று இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஆபிரிக்காவின் மிகப் பழைமையான யூத தேவாலயத்துக்கு இஸ்ரேல், மற்றும் ஐரோப்பிய நாடுகளிலிருந்து பெரும் எண்ணிக்கையான யாத்திரிகர்கள் வருவது வழக்கமாகும்.

இந்நிலையில், பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் அங்கு நேற்று முன் தினம் தாக்குதல் நடத்தியுள்ளார். அவர் முதலில் சக பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரை சுட்டுக்கொன்றுவிட்டு, அவரின் ஆயுதங்களையும் எடுத்துக்கொண்டு, யாத்திரிகர்கள் மற்றும் பாதுகாப்புப் படையினர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியதாக துனீஷியாவின் உள்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இச்சம்பவத்தில் 2 யாத்திரிகள் உட்பட இருவர் கொல்லப்பட்டனர். 30 வ யதான துனீஷியர் ஒருவர், 42 வயதான பிரஞ்சுப் பிரஜையொருவரே கொல்லப்பட்டுள்ளனர். அத்துடன் 6 படையினரும் 5 பொதுமக்களும் காயமடைந்துள்ளனர் எனவும் உள்துறை அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

# மத நிந்தனைக் குற்றத்தில் ஈரானில் இருவருக்கு தூக்கு

தெஹ்ரான், மே. 11

அல் குர்ஆனுக்கு தீவைத்தது, இஸ்லாத்தின் இறைத்துதரை அவமதித்த குற்றச்சாட்டில் ஈரானில் இருவருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

மரண தண்டனை நிறைவேற்றப்பட்ட யூசப் மஹ்ரத் மற்றும் சத்ருல்லா பசாலி சாரா என்ற இருவரும் நாத்திக பிரசாரம் மற்றும் புனிதங்களை இழிவுபடுத்தும் வகையில் பல சமூக ஊடகங்களை நடத்தி வந்ததாக நீதித்துறையின் மீசான் செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

மஹ்தியின் சட்டத்தரணி, அவர் அப்பாவி என்றும் அவர் மீதான தண்டனை அநீதியானது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இதனை "மத்திய கால அரசு ஒன்றின் கொடூரச் செயல்" என்று இந்த மரண தண்டனைகளை உரிமைக் குழு ஒன்று சாடியுள்ளது.

ஈரானில் அரச எதிர்ப்பு பதற்ற சூழலுக்கு மத்தியில் அந்நாட்டில் மரண தண்டனை வழங்குவது அதிகரித்தபோதும் மத நிந்தனை குற்றச்சாட்டில் மரண தண்டனை வழங்கப்படுவது அரிதானதாக உள்ளது.

மத்திய ஈரானில் உள்ள அரச் சிறைச்சாலையில் இந்த இருவரும் கடந்த திங்கட்கிழமை தூக்கிலிடப்பட்டதாக மீசான் செய்தி வெளியிட்டுள்ளது.

மதத்தை இழிவுபடுத்தும் வகையில் ரெலிகிராம் சமூகத் தளம் ஒன்றை நடத்திய குற்றச்சாட்டில் 2020 ஆம் ஆண்டிலேயே இந்த இருவரும் கைது செய்யப்பட்டனர். முதல் இரு மாதங்களும் தனிமைச் சிறையில் வைக்கப்பட்ட இந்த இருவரும் சட்டத்தரணிகளை அணுகுவதற்கு தடை விதிக்கப்பட்டதாக ஈரானின் மனித உரிமை குழு ஒன்று குறிப்பிட்டது. (அ)

# சூர்யகுமாரின் அதிரடி ஆட்டத்தால் பெங்களூரை வென்றது மும்பை




மும்பை, மே 11

றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணிக்கு எதிரான ஐ. பி. எல். போட்டியில் 6 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்று மும்பை இந்தியன்ஸ் அணி மூன்றாம் இடத் துக்கு முன்னேறியுள்ளது.

200 ஓட்டங்கள் இலக்கை துரத்திய மும்பை இந்தியன்ஸ் அணிக்கு ரோஹித் வழக்கம்போல் ஏமாற்ற தொடக்கம் கொடுத்தாலும் மற்றொரு முனையில் இருந்த இஷான் கிஷன் ஆரம்பம் முதலே அதிரடி காட்டினார். 20 பந்துகளில் தலா 4 பௌண்ட்ரிகள், சிக்ஸர்கள் விளாசி 42 ஓட்டங்கள் சேர்த்துவிட்டு, 21ஆவது பந்தில் - பவர் பிளே முடிவதற்குள்ளாகவே ஆட்டமிழந்தார். முதல் விக்கெட்டாக இஷான் கிஷன் வெளியேறிய அடுத்த நிமிடமே 7 ஓட்டங்களில் ரோஹித் ஷர்மாவும் நடையைக் கட்டினார். இந்த இருவரது விக்கெட்டை யும் வனிந்து ஹஸரங்க வீழ்த்தினார்.

இதன்பின்னரே மும்பை இந்தியன்ஸ் அணியின் ஆட்டம் சூடுபிடித்தது. சூர்யகுமார் யாதவ் மற்றும் நேஹல் வதேரா இணைந்து பெங்களூரின் பந்துவீச்சை கலங்கடித்தனர்.

26 பந்துகளில் அரைச்சதம் தொட்ட சூர்யகுமார் யாதவ் ஆட்டத்தை சீக்கிரமாக முடிக்கும் முயற்சியில் பந்துகளை சிக்ஸருக்கு பறக்கவிட்டார். விஜயகுமார் பௌண்ட்ரி என அடுத்தடுத்து அதிரடி காட்டிய சூர்ய குமார் அதே ஓவரில் பிடியெடுப்பானார். 35 பந்துகளில் 83 ஓட்டங்கள் எடுத்திருந்தார் அவர். இதில் 6 சிக்ஸர்கள், 7 பௌண்ட்ரிகள் அடக்கம். இதன்பின் மும்பை வெற்றிபெற 4 ஓவர்களில் 7 ஓட்டங்கள் மட்டுமே தேவைப்பட எளிதாக வெற்றி இலக்கை எட்டியது.

கடைசியில் ஒரு சிக்ஸர் அடித்து வெற்றியை உறுதிசெய்தார் நேஹல் வதேரா. அவர் இறுதிவரை ஆட்ட மிழக்காமல் 52 ஓட்டங்கள் எடுத்தி ருந்தார்.

3.3 ஓவர்கள் மீதமிருக்க, 4 விக் கெட்களை இழந்து 200 ஓட்டங்கள் இலக்கை எட்டி வெற்றிபெற்றது மும்பை. பெங்களூர் தரப்பில் ஹஸ ரங்க மற்றும் விஜய குமார் வைசாக் தலா இரண்டு விக்கெட் வீழ்த்தினர்.

நடப்பு தொடரில் மும்பை பெறும் 6ஆவது வெற்றி இதுவாகும். இதன் மூலம் புள்ளிப் பட்டியலில் 3ஆம் இடத்துக்கு மும்பை முன்னேறியுள்ளது.

முன்னதாக நாணயச் சுழற்சியில் வென்ற மும்பை அணி முதலில் பந்துவீச்சை தெரிவு செய்தது. தொடக்க ஆட்டக்காரராக களமிறங்கிய விராட் கோலி ஓர் ஓட்டத்துடன் முதல் ஓவரில் விக்கெட்டை இழந்தார். அவரைத் தொடர்ந்து அனுஜ் ராவத் 6 ஓட்டங்களுடன் வெளியேறினார்.

அடுத்து வந்த டு பிளெசிஸ் மற்றும் கிளான் மக்ஸ் வெல் இணை மும்பை பந்து வீச்சாளர்களின் பந்துகளை சிதறடித்தனர். 12 ஓவர் வரை இந்த இணையை பிரிக்க முடியாமல் மும்பை திக்குமுக் காடியது. ஒருவழியாக போராடி 4 சிக்ஸர்களுடன் 33 பந்துகளில் 68 ஓட்டங்களை குவித்த மக்ஸ்வெல்லை ஜசன் பெஹ்ரன்டோர்ப் ஆட்டமிழக்க செய்தார். அடுத்து மஹிபால் லோமரோர் ஓர் ஓட்டத்துடன் ஆட்டமிழக்க, டு பிளெசிஸும் 65 ஓட்டங்களுடன் கிளம்பினார்.

17 ஓவர் முடிவில் 5 விக்கெட்களை இழந்து 170 ஓட்டங்களை சேர்த்திருந்த நிலையில், தினேஷ் கார்த்திக் கும், கேதர் யாதவும் இணைந்து நிதான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். தினேஷ் கார்த்திக் சிக்ஸர் விளாசி நம்பிக்கையூட்டினாலும் 30 ஓட்டங்களில் அவசரப் பட்டு கிளம்பினார். இறுதியில் நிர்ணயிக் கப்பட்ட 20 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட்களை இழந்த பெங்களூர் 199 ஓட்டங்களை குவித்தது.

மும்பை அணி தரப்பில் ஜேசன் பெஹ்ரன்டோர்ஃப் அதிகபட்சமாக 3 விக்கெட்களையும், கமரூன் கிறீன், கிறிஸ் ஜோர்தன், குமார் கார்த்திகேயா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர். (ஐ)



# ஆப்கான் - இலங்கை போட்டி அட்டவணை

கொழும்பு, மே 11

ஆப்கானிஸ்தான் அணி அடுத்த மாதம் இலங்கைக்கு வந்து 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடவுள்ளது.

இந்தத் தொடருக்கான போட்டி அட்டவணையை இலங்கை கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ளது.

மூன்று ஒருநாள் போட்டிகளும் முறையே ஜூன் 2, 4, 7 ஆகிய திகதிகளில் நடைபெறுகிறது. 3 ஒருநாள் போட்டி களும் அம்பாந்தோட்டையில் நடைபெறவுள்ளது. (ஐ)

# உலகக் கிண்ணத் தொடருக்கு தென்னாபிரிக்கா நேரடி தகுதி!



டுபாய், மே 11

அயர்லாந்து- பங்களாதேஷ் இடையேயான 3 போட்டி கள் கொண்ட ஒருநாள் தொடர் இங்கிலாந்தில் நடை பெற்று வருகிறது.

இரு அணிகளுக்கும் இடையிலான முதலாவது ஒரு நாள் போட்டி நேற்றுமுன்தினம் எனினும் 16 ஓவர் கள் வீசப்பட்ட இந்தப் போட்டி கடும் மழையால் கைவிடப் பட்டது.

இந்த ஒருநாள் தொடரை அயர்லாந்து 3 - 0 என்ற ரீதியில் கைப்பற்றியிருந்தால் உலகக் கிண்ணத் தொட ருக்கு நேரடியாக தகுதி பெற்றிருக்கும். ஆனால், முதல் போட்டி கைவிடப்பட்டமையால் தென்னாபிரிக்க அணி உலகக் கிண்ணத்துக்கு நேரடியாகத் தகுதி பெற்றது.

# ஒருநாள் உலகக் கிண்ணம் போட்டிகள் குறித்த தகவல்!




புதுடில்லி, மே 11

ஒருநாள் உலகக் கிண்ணம் எதிர்வரும் ஒக்ரோபர் - நவம்பரில் நடைபெறவுள்ளது. இந்தத் தொடருக்கு இதுவரை இந்தியா, இங்கிலாந்து, நியூசிலாந்து, பாகிஸ் தான், அவுஸ்திரேலியா, பங்களாதேஷ், ஆப்கானிஸ் தான், தென்னாபிரிக்கா ஆகிய அணிகள் தகுதி பெற்றுள்ளன.

உலகக்கிண்ணத் தொடரின் முதலாவது ஆட்டம் ஒக்ரோபர் 5ஆம் திகதி அஹமதாபாத்தில் நடைபெற வுள்ளது. இந்த போட்டியில் கடந்த உலகக் கிண்ணத் தில் முதல் 2 இடங்களை பிடித்த இங்கிலாந்தும், நியூசிலாந்தும் மோதவுள்ளன.

இந்தியா தனது முதல் ஆட்டத்தில் அவுஸ்திரேலி யாவை சந்திக்கலாம் என்றும் இந்த போட்டி சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நடத்தப்பட வாய்ப்பு உள்ள தாகவும் கூறப்படுகிறது. மேலும், இந்தியா - பாகிஸ் தான் அணிகளுக்கு இடையிலான ஆட்டம் ஒக்ரோ பர்15ஆம் தேதி அஹமதாபாத்தில் நடைபெற உள்ளதாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளன.

இலங்கை அணி தகுதி சுற்றில் ஆடியே பிரதான சுற்றுக்கு முன்னேற வேண்டியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இலங்கையில் ஆசிய கிண்ணம்? பாகிஸ்தான் புறக்கணிக்கக்கூடும்

லாகூர், மே 11




ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி செப்ரெம்பரில் பாகிஸ்தா னில் நடத்தத் திட்டமிடப்பட்டு இருந்தது. இந்தப் போட்டியை பாகிஸ்தானில் நடத்தினால் பங் கேற்க மாட்டோம் என்று இந்திய கிரிக்கெட் சபை (பி.சி.சி.ஐ.) அறிவித்தது.

இதைத் தொடர்ந்து இந்தியா வில் நடைபெறும் உலகக் கிண் ணத்தை புறக்கணிக்கப் போவதாக பாகிஸ்தான் பதிலடி கொடுத்தது. இதைதொடர்ந்து ஆசிய கிரிக்கெட் சபை நிர்வாகிகள் ஆலோசனை செய்தனர்.

ஆசிய கிண்ணத்தை பொது வான இடமான இலங்கை அல்லது ஐக்கிய அரபு எமிரேட்ஸில் நடத்த முடிவு செய்யப்பட்டது. இந்த நிலையில் ஆசியக் கிண்ணத்தை இலங்கையில் நடத்துவது என்று ஆசிய சபை முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியானது.

இதற்கு பாகிஸ்தான் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது. ஆசியக் கிண்ணம் ஐக்கிய அரபு எமிரேட் ஸில்தான் நடைபெறும் என்று பாகிஸ்தான் எதிர்பார்த்தது. ஆனால், இலங்கையில் நடை பெறுவதை அந்த நாடு ஏற்றுக் கொள்ளவில்லை. இதைத் தொடர்ந்து ஆசியக் கிண்ணத்தை புறக்கணிக்கப்போவதாக பாகிஸ் தான் கிரிக்கெட் சபை மிரட்டல் விடுத்துள்ளது. ஆசிய கிரிக்கெட் சபை நிர்வாகிகளை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தலைவர் நஜிம் சேதி சந்தித்து தங்களது எதிர்ப்பை தெரிவித்தார். (ஐ)

# டெங்கு நோயை கட்டுப்படுத்துவதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கை அவசியம்

## உடன் மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி உத்தரவு

கொழும்பு, மே. 11

டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதற்கான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டுள்ளார்.

ஜனாதிபதியின் பணிப்புரையின்பிரகாரம் அனைத்து மாகாண செயலாளர்களுக்கும் ஜனாதிபதியின் செயலாளர் சமன் எக்கநாயக்க எழுத்து மூலம் இதனை அறியப்படுத்தியுள்ளார்.

இதன்படி டெங்கு கட்டுப்பாட்டு வேலைத்திட்டத்தின் தேவைக்கு ஏற்ப பிரதம செயலாளர்களுக்கு முழுமையான ஆதரவை வழங்குமாறு பொலிஸார் மற்றும் முப்படையினருக்கும் ஜனாதிபதியின் செயலாளர் பணிப்புரை விடுத்துள்ளார்.

கடந்த வாரத்தில் நாடளாவிய ரீதியில் 1896 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதுடன், மேல் மாகாணத்தில் அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.இது 49 சதவீதமாகும் எனவும் தெரியவந்துள்ளது.

தற்போது டெங்கு வைரஸின் 2 ஆம் மற்றும் 3 ஆம் திரிபுகள் அதிகளவில் பதிவாகியுள்ளன என்றும் 14 வருடங்களின் பின்னர் டெங்கு வைரஸின் 3 ஆவது திரிபு பரவுகிறது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளதோடு நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக உள்ளதால், டெங்கு நோய் பரவும் வாய்ப்பும் அதிகரித்துள்ளதாக சுகாதார அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். (அ)

# 92,000 இலங்கையர் அகதியாக தமிழ் நாட்டில் வசிக்கின்றனர்

## அமைச்சர் அலி சப்ரி தகவல்

கொழும்பு, மே. 11

அகதிகளாகப் பதிவு செய்து 92,000 இற்கும் மேற்பட்ட இலங்கையர்கள் தற்போது தமிழ்நாட்டில் தங்கியிருக்கின்றனர் என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி உறுதிப்படுத்தியுள்ளார்.

நேற்று முன் தினம் பாராளுமன்றத்தில் உரையாற்றிய அமைச்சர், 92 ஆயிரத்து 435 இலங்கையர்கள் அகதி முகாம்களுக்கு உள்ளோ அல்லது அதற்கு வெளியேயோ தமிழ் நாட்டில் தங்கியுள்ளனர்.

தமிழகத்தில் தற்போது மொத்தம் 106 அகதிகள் முகாம்கள் இயங்கி வருகின்றன.

தமிழக அகதிகள் முகாம்களில் தற்போது 19,046 குடும்பங்களைச் சேர்ந்த 58,435 நபர்கள் தங்கியுள்ளனர்.

சுமார் 10,000 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 34,000 இலங்கையர்களும் மாநிலத்தில் வேறு இடங்களில் வசித்து வருகின்றனர்-என்றார்.

இதேவேளை, உள்நாட்டு யுத்தம் நிறைவடைந்த பின்னர் பெருமளவான இலங்கையர்கள் நாடு திரும்பியுள்ளதாக அமைச்சர் அலி சப்ரி குறிப்பிட்டார். (அ)

# ஜூலை முதலாம் திகதி முதல் நலன்புரிக் கொடுப்பனவுகள்

கொழும்பு, மே. 11

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கமைய முன்னெடுக்கப்படும் ஆறுதல் நலன்புரி நன்மைகள் கொடுப்பனவு வழங்கும் பணிகள் ஜூலை 01 முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது.

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அதிகாரங்களுக்கமைய இதற்கான வர்த்தமானி அறிவித்தல் ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி இடைநிலை, பாதிக்கப்படக்கூடிய, வறிய மற்றும் மிகவும் வறுமையான குடும்பங்களுக்கு 04 பிரிவுகளின் கீழ் கொடுப்பனவுகள் வழங்கப்பட உள்ளதோடு, அங்கவீனமானவர்கள், முதியவர்கள் மற்றும் சிறுநீரக நோயாளர்கள் ஆகியோருக்கும் நலன்புரி கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

அதற்கமைய தற்காலிக நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்திருக்கும் 400,000 பேருக்கான 2,500 ரூபாய் மாதாந்த கொடுப்பனவு 2023 டிசம்பர் 31 வரையிலும் வழங்கப்பட இருப்பதோடு பாதிக்கப்படக் கூடிய 400,000 பேருக்கான 5,000 ரூபாய் கொடுப்பனவு 2024 ஜூலை 31 வரையிலும் வழங்கப்படவுள்ளது.

மேலும் வறியோர் என்று அறியப்பட்ட பயனாளிகள் 800,000 பேருக்கான 8,500 ரூபாய் கொடுப்பனவும் மிக வறுமையானவர்களுக்காக மாதாந்தம் 15,000 கொடுப்பனவும் 2023 ஜூலை 01 முதல் மூன்று வருட காலத்திற்கு வழங்கப்படவுள்ளன.

தற்போது நலன்புரி நன்மைகள் கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்ளும் 72,000 மாற்றுத்திறனாளிகளுக்கு மாதாந்தம் 5,000 ரூபாய் வீதமும், சிறுநீரக பாதிப்புக்கான நிவாரணங்களை பெறும் 39,150 பேருக்கு 5,000 ரூபாய் வீதமும் முதியவர்களுக்கான கொடுப்பனவுகளை பெறும் 416,667 பேருக்கு 2,000 ரூபாய் என்ற அடிப்படையிலும் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

மேற்படி நலன்புரி நன்மைகள் கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்வதற்காக நாடளாவிய ரீதியிலுள்ள 340 பிரதேச செயலாளர் பிரிவுகளிலிருந்து 3,712,096 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இந்த நலன்புரி நன்மைகள் கொடுப்பனவு திட்டத்திற்கு தகுதியானவர்களை கண்டறிவதற்கான திட்டத்தில் தகவல்களை சரிபார்க்கும் பணிகளில் 91.5 சதவீதம் கடந்த 8ஆம் திகதி நிறைவடைந்திருந்தது.

பிரதேச செயலாளர் பிரிவுகளில் மூவர் அடங்கிய தெரிவுக் குழு ஒன்றின் கீழ் தகவல்கள் பரிசீலிக்கப்பட்டு மாவட்ட செயலாளரின் அனுமதியை பெற்றுக் கொள்வதற்கான வேலைத்திட்டம் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தற்போதுவரையில் தகவல்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ள விண்ணப்பங்களில் அதிகளவானவை வவுனியா மாவட்டத்திலிருந்து கிடைத்துள்ளதோடு அம் மாவட்டத்திலிருந்து 98.08 சதவீதமானவர்கள் விண்ணப்பித்துள்ளனர்.

அடுத்தபடியாக கண்டியிலிருந்து 96.05%, கிளிநொச்சியிலிருந்து 96%, யாழ்ப்பாணத்திலிருந்து 96% திருகோணமலையிலிருந்து 95.5% சதவீதமான விண்ணப்பங்களும் கிடைக்கப்பெற்றுள்ள நிலையில் நாடளாவிய ரீதியில் 3,362,040 விண்ணப்பங்கள் தொடர்பிலான தகவல்களை உறுதிப்படுத்தும் வேலைத்திட்டங்கள் தற்போது வரையில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. (அ)

# முட்டையின் விலை மேலும் குறையும்?

கொழும்பு, மே. 11

முட்டைக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு விலையை விட முட்டைகளை குறைந்த விலையில் கொள்வனவு செய்ய முடியும் என அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் ஆர்.எம்..சரத் ரத்நாயக்க தெரிவித்தார்.

ஒரு வெள்ளை முட்டை மொத்த விலையில் 40 ரூபாய்க்கும், பழுப்பு முட்டை 41 ரூபாய்க்கும் வியாபாரிகளுக்கு விற்பனை செய்யப்படுவதாகவும், பேக்கரிகளில் இருந்து 44-45 ரூபாய்க்கு முட்டை கொள்முதல் செய்யப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

வெள்ளை முட்டை ஒன்றுக்கு 44 ரூபாவும், பழுப்பு நிற முட்டை ஒன்றிற்கு 46 ரூபாவும் நுகர்வோர் அதிகாரசபை கட்டுப்பாட்டு விலையை பிறப்பித்துள்ளபோதிலும், இம்மாத இறுதிக்குள் முட்டையின் விலை மேலும் குறைவடையும் எனவும், குறிப்பிட்டார். (அ)

# சஜித் பிரேமதாஸதான் ஜனாதிபதி வேட்பாளர்

## கட்சி செயற்குழு ஒப்புதல்

கொழும்பு, மே. 11

**2024 ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்து ஐக்கிய மக்கள் சக்தி தலைமையில் பரந்தப்பட்ட அரசியல் கூட்டணியை அமைப்பதற்கு அந்தக் கட்சியின் செயற்குழு அனுமதி வழங்கியுள்ளது.**

ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்குழுக் கூட்டம் கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் கடந்த திங்கள் இரவு நடைபெற்றது.

இதன்போது சமகால அரசியல் மற்றும் கட்சியின் அடுத்த கட்ட நகர்வுகள் சம்பந்தமாக ஆராயப்பட்டன.

இதன்படி அரசுடன் இணைவதில்லை எனவும், அமைச்சுப் பதவிகளை ஏற்பதில்லை எனவும் முடிவெடுக்கப்பட்டது.

கட்சியின் முடிவை மீறுபவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுப்பதற்கும், கட்சி முடிவுக்கு கட்டுப்படாதவர்கள் வெளியேறலாம் எனவும் தீர்மானம் எடுக்கப்பட்டது.

அத்துடன், ஐக்கிய மக்கள் சக்தி தலைமையில் பரந்தப்பட்ட அரசியல் கூட்டணி அமைத்து,



அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக சஜித் பிரேமதாஸ நிறுத்தப்பட வேண்டும் என்ற தீர்மானமும் செயற்குழு கூட்டத்தில் எடுக்கப்பட்டுள்ளது. (அ)

# நாட்டை சீர்படுத்திய ஜனாதிபதிக்கு தொடர்ந்து வாய்ப்பளிக்கவேண்டும்

## திலும் அமுனுகம வலியுறுத்து

கொழும்பு, மே. 11

சிக்கல் நிலையில் இருந்த நாட்டை ஸ்திரப்படுத்தி ஒரு வருட காலப்பகுதிக்குள் மக்களின் வாழ்க்கையை வழமைக்குக் கொண்டு வருவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க செயற்பட்டிருப்பதால் இன்னும் சில வருடங்களுக்கு இந்த வேலைத்திட்டத்தை தொடர அவருக்கு அதிகாரம் கிடைக்க வேண்டும் என இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டின் பிரச்னைகள் களையப்பட்டு இன்று தேர்தலைக் கோராத நிலையை மக்கள் அடைந்துள்ளனர். அரசியல் கட்சிகளும் மறந்துவிட்டன. ஏனெனில் இந்தப் பிரச்னை இருந்ததால், அதை அகற்றுவது எளிதாக இருந்தது. தற்போது அந்த காயத்தை ஜனாதிபதி குணப்படுத்தியுள்ளார். இப்போது எந்த காயமும் இல்லை. இப்போது சில அரசியல் கட்சிகள் மிகவும் சோகத்தில் உள்ளன. எமது ஜனாதிபதி, அரசாங்கம் மொட்டு அரசாங்கம். அந்த வகையில் பார்த்தால், ஜனாதிபதி ஒரு வருடத்துக்குள் நாட்டை இந்த நிலையில் இருந்து ஸ்திரப்படுத்தி, மக்களின் வாழ்வாதாரத்தை மீட்டெடுத்து, வீதி மறியல் போராட்டங்களை நிறுத்தி, இந்த நிலையை உருவாக்கி இருப்பதால் இன்னும் சில வருடங்களுக்கு அந்த பலத்தை அவருக்கு நாம் வழங்கவேண்டும். எங்கள் கட்சியினர் தாக்கப்பட்டனர். எம்.பி.க்களின் வீடுகளுக்கு தீ வைக்கப்பட்டு, கட்சிக்கு பெரும் சேதம் ஏற்பட்டது. கட்சியின் மன உறுதியில் பின்னடைவு ஏற்பட்டது. ரணில் விக்கிரமசிங்க இதுவரை எடுத்துள்ள நடவடிக்கைகளும் அதனை சீர்திருத்த உதவியுள்ளன-என்றார். (அ)

## வட, கிழக்கு...

என்றும் அவர் கூறியுள்ளார்.

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றிய அவர்,

நாட்டில் புரையோடிப் போயுள்ள இனப் பிரச்னைக்கு தீர்வு காண்பதற்காகவே வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்கள் தமிழ் அரசியல்வாதிகளுக்கு தொடர்ந்து ஆணை வழங்கி வருகிறார்கள். இனப்பிரச்னைக்கு தீர்வு காண்பதற்காக விடுக்கப்படும் சகல அழைப்புக்களின் போதும் வெளிப்படை தன்மையுடனும், எதிர்பார்ப்புடனும் கூட்டங்களில் கலந்து கொள்கிறோம்.

75ஆவது சுதந்திர தினத்துக்கு முன்னர் இனப்பிரச்னைக்கு தீர்வு காண்பதாக ஜனாதிபதி குறிப்பிட்டு பேச்சுக்கு அழைப்பு விடுத்தார். இந்த பேச்சில் சிறந்த தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையில் எமது தலைவர் இரா.சம்பந்தன் இதயசுத்தியுடன் கலந்துகொண்டார்.

இனப்பிரச்னைக்கான தீர்வு என்று ஒவ்வொரு முறையும் அழைப்பு விடுக்கும்போது அதனை புறக்கணிக்காமல் தமிழ் தேசிய கூட்டமைப்பு கூட்டங்களில் கலந்துகொண்டுள்ளது. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிலவும் அடிப்படை பிரச்னைகளுக்கு தீர்வு காண ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வடக்கு, கிழக்கு மாகாணங்களின் தமிழ் அரசியல்வாதிகளை தனித்தனியாக சந்திக்க தீர்மானித்துள்ளதாக குறிப்பிட்டு எமக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

இந்த விடயம் தொடர்பில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண அரசியல்வாதிகள் மத்தியில் மாறுப்பட்ட பல கருத்துகள் காணப்பட்டன. வடக்கு, கிழக்கு மாகாணங்களை வேறுப்படுத்தி இனப் பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது என்பதை ஜனாதிபதியிடம் எடுத்துரைத்தோம். இதனை தொடர்ந்து வடக்கு, கிழக்கு மாகாண தமிழ் அரசியல்வாதிகளை ஒன்றாக சந்திக்க ஜனாதிபதி இணக்கம் தெரிவித்தார்.

இதற்கமைய நாளை (இன்று) காணி விவகாரம் தொடர்பான பேச்சு இடம்பெறவுள்ளது, நாளை மறுதினம் (நாளை) அதிகார பகிர்வு தொடர்பில் பேச்சு இடம்பெறவுள்ளது.

இனப்பிரச்னைக்கு தீர்வு, அடிப்படை பிரச்னைகளுக்கு தீர்வு ஆகியவற்றுக்கு தீர்வு காணும் வகையிலான பேச்சுக்கு வாய்ப்பு கிடைக்கும் போது அதனை தமிழ் தரப்பினர் சாதகமாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இனப்பிரச்னைக்கு தீர்வு காண்பதற்காகவே வடக்கு, கிழக்கு மாகாண மக்கள் தமிழ் தலைமைகளுக்கு தொடர்ந்து ஆணை வழங்குகிறார்கள். ஆகவே, ஜனாதிபதி தலைமையில் இடம்பெறும் பேச்சில் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் தமிழ் அரசியல்வாதிகள் கலந்து கொள்ள வேண்டும் - என்றார். (ஐ)

## ஜனாதிபதி...

கள், இதேபோன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் த. சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன் தலைமையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள், தமிழ் மக்கள் கூட்டணியின் க. வி. விக்னேஸ்வரன் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர்.

இந்தப் பேச்சு நாளை வெள்ளிக்கிழமையும் நடைபெறவுள்ளது. இந்தப் பேச்சின்போது அரசியல் தீர்வுக்கான அதிகாரப் பகிர்வு குறித்துப் பேசப்படவுள்ளது.

இந்நிலையில், வடக்கு அபிவிருத்தி குறித்து பேசப்படுவதாக இருந்த சனிக்கிழமை பேச்சு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நேற்று முன்தினம் சந்தித்துப் பேசிய தமிழரசு கட்சியினர் வடக்கு, கிழக்கு அபிவிருத்தி குறித்து ஒரேதடவையில் பேச வேண்டும் என்று விடுத்த அழைப்பை ஏற்று பிற்போடப்பட்டுள்ளது. இதேவேளை, ஜனாதிபதியுடனான இந்தப் பேச்சு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பங்கேற்காது என்று தெரியவருகிறது.

(ஐ)

## வெடுக்கு...

ளைக்கு அமைவாக கடந்த ஏப்ரல் 28 ஆம் திகதி மீண்டும் விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டன. இதைத் தொடர்ந்து தொடர்ச்சியாக பன்னிரு தினங்கள் பூசைகள் இடம்பெற்று வந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பரவுகின்றன...

அறிகுறிகள் மூன்று வகையான காய்ச்சலிலும் இருக்கின்றன. இதற்கிடையில், இந்த மூன்று வகையான காய்ச் சலிலும் டெங்கு காய்ச்சல் வேகமாக பரவுகிறது. ஒரு வாரத்தில் கிட்டத்தட்ட 2 ஆயிரம் டெங்கு நோயாளர்கள் பதிவாகின்றனர். எனவே, இந்தக் காய்ச்சல்கள் தொடர்பில் பொதுமக்கள் எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும்.

அத்துடன், காய்ச்சல் ஏற்பட்டால் உடனடியாக மருத்துவர்களை நாட வேண்டும் என்றும் அவர்கள் அறிவுறுத்தியுள்ளனர். (ஐ)

## ரயில்...

கணிப்பு போராட்டம் தொடர்ந்திருந்தது.

பிரதி பொது முகாமையாளர் பதவிக்கு அதிகாரி ஒருவரை நியமிப்பது தொடர்பான பிரச்னையை முன்வைத்தே இந்த பணிப்புறக்கணிப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டதாக ரயில் நிலைய பொறுப்பதிகாரிகள் சங்கத்தின் தலைவர் சுமேத சோமரத்ன தெரிவித்தார். (ஐ)

## துயிலும்...

23ஆவது சிங்க படையணி முகாம் அமைத்துள்ளது. இது தொடர்பாக, செய்தியாளர்களை சந்தித்த மாவீரர்களின் பெற்றோர்களே இவ்வாறு தெரிவித்தனர்.

“எங்கள் பிள்ளைகள் புதைக்கப்பட்ட இடத்தில் இராணுவத்தினர் விவசாயம் செய்கிறார்கள், கிரிக்கெட் விளையாடுகிறார்கள், உணவகம் நடத்துகிறார்கள். எங்கள் பிள்ளைகளுக்கு அமைதியான முறையில் அஞ்சலி செலுத்துவதற்கு அவர்கள் உடனடியாக கல்லறையை விட்டு வெளியேற வேண்டும்.”- என்று முத்தையன்கட்டை சேர்ந்த முருகையா இராசையா என்ற மாவீரரின் தந்தை தெரிவித்தார்.

இதேபோன்று, “எங்கள் உறவினர்களுக்கு அஞ்சலி செலுத்தவும், அவர்களின் ஆத்மா சாந்தியடையவும், தீபம் ஏற்றவும் முடியாமல் கடும் மன உளைச்சலில் வாழ்கிறோம்” என மட்டக்களப்பை சேர்ந்தவரான மாவீரர்களின் தாய் தயாளினி தெரிவித்தார்.

மேலும், அளம்பில் மாவீரர் மயானம் அமைந்துள்ள காணியை மீளப் பெற்றுத் தரவேண்டும். விதைக்கப்பட்டஎமது பிள்ளைகளுக்கு பெற்றோர்களும் உறவுகளும் அஞ்சலி செலுத்தும் வகையிலும் அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இதை நிறைவேற்றத் தவறினால் உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுப்போம் என்று அவர்கள் தெரிவித்தனர்.

தமிழ் மக்களின் உரிமைக்காகப் போராடி வீரச் சாவடைந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் மாவீரர்கள் நவம்பர் 27ஆம் திகதி நினைவுகூரப்படுவது வழக்கம். விடுதலைப் புலிகளின் காலத்தில் மிகச்சிறப்பாக இந்தத் தினம் கடைப்பிடிக்கப்பட்டது. எனினும், இறுதிப் போர் முடிவுக்கு வந்த பின்னர், மாவீரர்களை நினைவேந்த தடை விதிக்கப்பட்டது. எனினும், 2015ஆம் ஆண்டு ஆட்சி மாற்றம் முதல் இந்தத் தடை நீக்கப்பட்டாலும் இராணுவத்தின் அடக்கு முறைகள் தொடர்கின்றன. போர் காலத்திலும், போரின் முடிவுற்றதைத் தொடர்ந்தும் வடக்கு - கிழக்கு முழுவதும் 25 மாவீரர் துயிலும் இல்லங்கள் இராணுவத்தினரால் அழிக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

### எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விவகாரம்:

# 15 ஆயிரம் மீனவர்களுக்கு நட்டஈடு வழங்கியுள்ளோம்!

### மின்சக்தி அமைச்சர் காஞ்சன

கொழும்பு, மே 11

எக்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்தால் கடல் வளங்களுக்கும் கடற்கரையோரங்களுக்கும் ஏற்பட்ட மாசடைவை குறுகிய காலத்துக்குள் தூய்மைப்படுத்தினோம். கம்பஹா, கொழும்பு, களுத்துறை ஆகிய மாவட்டங்களில் நேரடியாக பாதிக்கப்பட்ட 15 ஆயிரத்து 32 மீனவர்களுக்கு மொத்தமாக 300 கோடி ரூபாய் வரை நட்டஈடு வழங்கப்பட்டுள்ளது என்று மின்சாரத்துறை மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்தார்.

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்து தொடர்பான ஒத்திவைப்பு பிரேரணை குறித்த விவாதத்தில் நேற்று பாராளுமன்றில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்து இடம்பெற்ற காலப்பகுதியில் நான் கடற்றொழில் வளங்கள் இராஜாங்க அமைச்சராக பதவி வகித்தேன். இதன்போது மீனவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்பு தொடர்பில் கடற்றொழில் வளங்கள் அமைச்சு ஊடாக விசேட கவனம் செலுத்தப்பட்டது.

நாட்டின் கடற்பரப்பில் தீ விபத்துக்கு உள்ளான எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தொடர்பில் பல்வேறு தரப்பினர் பொறுப்பற்ற வகையில் தெரிவித்த கருத்துக்கள் நட்டஈடு பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. நட்டஈடு பெற்றுக்கொள்வதற்கு எங்கு வழக்கு தாக்கல் செய்ய வேண்டும் என்பதை 225 பாராளுமன்ற உறுப்பினர்கள் தீர்மானிக்க முடியாது.

துறைசார் நிபுணர்கள் சமர்ப்பித்த அறிக்கையை அடிப்படையாக கொண்டு சட்ட ஆலோசனைகளுக்கு அமைய சிங்கப்பூர் நாட்டில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த கப்பல் விபத்து தேசிய பிரச்சினையாக கருதப்படுகிறது. ஆகவே, இந்த விடயத்தில் அரசாங்கம் பொறுப்புடன் செயல்பட்டுள்ளது என்பதை உறுதியாக குறிப்பிட முடியும்.

கப்பல் விபத்தால் மீனவர்கள் தொழில் துறை ரீதியாக பாதிக்கப்பட்டார்கள். நட்டஈடு வழங்குவதற்காக அரச அதிகாரிகளை உள்ளடக்கிய குழு நியமிக்கப்பட்டது.

மீனவர்களுக்கு நட்டஈடு வழங்க கப்பலின் காப்புறுதி நிறுவனம் 300 கோடி ரூபாய் நிதி வழங்கியது.மீனவர்களுக்கு கட்டம்கட்டமாக நட்டஈடு வழங்கப்பட்டது. 15 ஆயிரத்துக்கும் அதிகமானோருக்கு நட்டஈடு வழங்கப்பட்டுள்ளது. மறுபுறம் மறைமுகமாக பாதிக்கப் பட்ட தரப்பினருக்கும் நட்டஈடு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. -என்றார். (ஐ)

## இலங்கைக்கு...

பிரான்ஸ் ஆகிய நாடுகள் மெய்நிகர் வழியில் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றன.

இலங்கையின் அனைத்து கடன் வழங்குநர்களும் தனித்தனியான கலந்துரையாடல்களை நடத்துவதற்கு பதிலாக பொதுவான தளத்தை உருவாக்குவதே இந்த கலந்துரையாடலின் நோக்கமாக இருந்தது.

இரு தரப்பு கடன் வழங்குநர்களுக்கு 710 கோடி டொலரையும் சீனாவுக்கு 300 கோடி டொலரையும் இந்தியாவுக்கு 160 கோடி அமெரிக்க டொலரையும் பாரிஸ் கிளப்புக்கு 240 கோடி டொலரையும் இலங்கை கடனாக செலுத்த வேண்டியுள்ளது.

1,200 கோடி டொலர்களுக்கு அதிகமான யூரோ பிணைமுறிகள் மற்றும் 270 கோடி டொலர் பெறுமதியான வணிகக் கடன்கள் தொடர்பில் மீண்டும் கலந்துரையாடும் நோக்குடன் இலங்கை அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டுள்ள பின்புலத்திலேயே இந்த கலந்துரையாடல் நடத்தப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

1,300 கோடி டொலருக்கும் அதிகமான உள்நாட்டு கடன் மறுசீரமைப்புக்கு மேலதிகமாகவே இந்த கலந்துரையாடல் நடத்தப்பட்டுள்ளது.

## கடன்...

வங்கியின் வருடாந்த அறிக்கை - 2022” என்ற தலைப்பில் உரையாற்றிய ஆளுநர் நந்தலால் வீரசிங்க, வங்கி முறைமை வீழ்ச்சி மற்றும் கடன் மறுசீரமைப்பு, பொதுமக்களின் வைப்புகளில் ஏற்படுத்தக்கூடிய தாக்கம் பற்றிய அச்சத்தைப் போக்கும் வகையில் கருத்துக்களை வெளியிட்டார்.

பல்வேறு மூலைகளிலிருந்து ஊகங்கள் இருந்தாலும், மத்திய வங்கி நிதி அமைப்பு உறுதித்தன்மையை உறுதிப்படுத்துவதற்கு எப்போதும் நடவடிக்கை எடுத்து வருவதாகவும், எதிர்காலத்திலும் அவ்வாறே செய்யும் என்றும் ஆளுநர் கூறினார்.

ஒருவித உள்நாட்டுக் கடன் மேம்படுத்தல் இருந்தாலும், பொதுமக்களின் வைப்புத்தொகையைப் பாதுகாப்பது மற்றும் வங்கி அமைப்பைப் பாதுகாப்பது முன்னுரிமை பெறும் என்று ஆளுநர் நந்தலால் வீரசிங்க வலியுறுத்தினார்.

வட்டி விகிதங்கள், குறிப்பாக சந்தை வட்டி விகிதங்கள் ஆண்டின் இரண்டாம் பாதியில் வேகமாக குறையும் என எதிர்பார்ப்பதாக இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க கூறினார்.

இந்த ஆண்டின் நான்காவது காலாண்டில் பணவீக்கம் ஒற்றை இலக்க புள்ளிகளுக்குக் குறையும் என்றும், குறிப்பாக முழுமையான கடன் மறுசீரமைப்பு செயல்முறை அறிவிக்கப்பட்டவுடன் வட்டி விகிதங்களும் வேகமாகக் குறையும் என்றும் அவர் கூறினார். (ஐ)

## புலிட்சர்...

கையின் ஒளிப்பட செய்தியாளர் பரிந்துரைக்கப்பட்டுள்ளார்.

இந்த விருதுக்கான இறுதிப் பட்டியலில் அசோசியேற்றட் பிறஸ் (ஏ.பி) ஒளிப்பட செய்தியாளர் எரங்க ஜயவர்த்தனவின் பெயரும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இவருடன் இந்த விருதுக்கான இறுதிப் பட்டியலுக்கு பரிந்துரைக்கப்பட்ட மற்றைய ஒளிப்பட செய்தியாளரும் இலங்கையில் கடந்த வருடம் எதிர்ப்பு போராட்டங்களை முன்னெடுத்த இளைஞர்களின் உணர்வுகளை பிரதிபலிக்கும் ஒளிப்படங்களை எடுத்தமைக்காக குறித்த விருதுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ஐ)

## 2,500...

இடத்தில் தோட்டம் ஒன்றில் 500 மூடைகளில் பதுக்கி வைக்கப்பட்டி ருந்த நிலையிலேயே இந்த கஞ்சா கைப்பற்றப் பட்டது.

கைப்பற்றப்பட்ட கஞ்சாவின் பெறுமதி இலங்கை மதிப்பில் சுமார் 100 கோடி ரூபாய்க் கும் அதிகம் என்று கூறப்படுகின்றது.

சில நாட்களுக்கு முன் னர் 120 கிலோ கஞ்சா கைப்பற்றப்பட்டது. திருச் செந்தூரில் கைப்பற்றப் பட்ட இந்தக் கஞ்சா இலங்கைக்கு கடத்தப்பட இருந்தது. இது தொடர் பில் நடத்தப்பட்ட விசாரணையிலேயே தோட்டத் தில் பதுக்கி வைக் கப்பட் டிருந்த சுமார் 2,500 கிலோ கஞ்சா கைப்பற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இவ்வளவு பெருந்தொகை கஞ்சா பிடிபட்டிருப்பது தூத்துக்குடி முழுவதும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# 113 வெளிநாட்டு பெண்களுக்கு இலங்கையில் துன்புறுத்தல்கள்!

கொழும்பு, மே. 11

இலங்கையில் கடந்த 4 மாத காலப் பகுதியில் 113 பெண்கள் பாலியல் ரீதியாக துன்புறுத்தப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

நான்கு மாத காலப் பகுதியில் வெளிநாட்டுப் பெண் சுற்றுலாப் பயணிகள் பாலியல் துன்புறுத்தல்கள், வேறும் வகையிலான துன்புறுத்தல்களுக்கு இலக்காகியுள்ளனர்.

வெளிநாட்டுப் பெண்களின் பணப்பைகளை பறித்தல், தாக்குதல், பாலியல் துஷ்பிரயோகம் உள்ளிட்ட பல்வேறு துன்புறுத்தல்களுக்கு வெளிநாட்டுப் பிரஜைகள் இலக்காகியுள்ளனர்.

வெளிநாட்டுப் பெண்களிடமிருந்து கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளில் அதிக எண்ணிக்கையிலான முறைப்பாடுகள் கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பிலானவை என்பது குறிப்பிடத்தக்கது.

அதிகளவான துன்புறுத்தல் சம்பவங்கள் தென் மாகாணத்தில் இடம்பெற்றுள்ளன என முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. (அ)

# பெற்றோலிருந்து மின்சாரத்துக்கு இன்று முதல் மாறும் ஓட்டோக்கள்

கொழும்பு, மே. 11

தற்போது எரிபொருளில் இயங்கும் ஓட்டோக்களை மின்சார முச்சக்கர வண்டிகளாக மாற்றும் திட்டம் இன்று முதல் முன்னெடுக்கப்படவுள்ளதாக மோட்டார் போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன் முதற்கட்டமாக 300 பெற்றோல் ஓட்டோக்கள் மின்சார ஓட்டோக்களாக மாற்றப்படவுள்ளதாக ஆணையாளர் நிஷாந்த வீரசிங்க தெரிவித்தார். (அ)

# மீண்டும் ஜி.எஸ்.பி வரிச்சலுகையை பெற விண்ணப்பிக்க தயாராகின்றது இலங்கை

## வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தகவல்



கொழும்பு, மே. 11

2024 -2034 காலப் பகுதிக்கான ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகைக் காக இலங்கை விண்ணப்பிக்கும் என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

ஜி.எஸ்.பி வரிச்சலுகைக்கான விண்ணப்பிப்பதற்கான அனுமதியை கோரும் அமைச்சரவைப் பத்திரத்தைச் சமர்ப்பித்துள்ள தாக அமைச்சர் கூறினார்.

கடந்த திங்கட்கிழமை ஐரோப் பிய ஒன்றியத்தின் வெளிநாட்டு செயற்பாடுகள் சேவைப்பிரிவின் ஆசிய - பசுபிக்கின் பிரதி முகா மைத்துவப் பணிப்பாளர் பவோலா பம்பலோனியுடன் இது தொடர்பில் பேச்சுவார்த்தைகளை மேற் கொண்டதாக அமைச்சர் குறிப்பிட்டார். (அ)

# பிளாஸ்ரிக் பொம்மைகளால் ஆபத்து

கொழும்பு, மே. 11

பிளாஸ்ரிக் பொம்மைகள் குழந்தைகளுக்கு கடுமையான உடல்நலப் பிரச்னைகளை ஏற்படுத்துவதால், பிளாஸ்ரிக் பொம்மைகள் விற்பனையை கட்டுப்படுத்துவது குறித்து மத்திய சுற்றாடல் அதிகார சபை கவனம் செலுத்தியுள்ளது.

பிளாஸ்ரிக் தவிர, இந்த பொம்மைகளில் கன உலோகங்கள் கொண்ட பல்வேறு வகையான வண்ணப்பூச்சுகளும் உள்ளதாக மத்திய சுற்றாடல் அதிகார சபையின் திண்மக் கழிவு முகாமைத்துவ பிரிவின் பணிப்பாளர் சரோஜனி ஜயசேகர தெரிவித்தார்.

பிளாஸ்ரிக் பொருட்களை பாவிப்பதால் பல்வேறு உடல்நலக் கோளாறுகள் ஏற்படுகின்றன. இதனால் மரத்தால் செய்யப்பட்ட பொம்மைகளை குழந்தைகளுக்குக் கொடுப்பதில் பெற்றோர்கள் கவனமாக இருக்க வேண்டியது அவசியம் என்றும் அவர் கூறினார். (அ)

# வடக்கில் இந்த வருடத்தில் 1326 டெங்கு நோயாளர்கள்

யாழ்ப்பாணம், மே. 11

வடக்கு மாகாணத்தில் இவ்வருடம் 1326 டெங்கு நோயாளர்கள் அடையாளங்காணப்பட்டுள்ளதாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 1121 டெங்கு நோயாளர்களும், கிளிநொச்சி மாவட்டத்தில் 51 பேரும், மன்னார் மாவட்டத்தில் 27 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 33 பேரும், வவுனியா மாவட்டத்தில் 94 பேரும் பதிவாகியுள்ளனர்.

வடமாகாணத்தில் இதுவரை 02 டெங்கு மரணங்கள் பதிவாகியுள்ளன. (அ)

# இலவச கண்புரை சத்திர சிகிச்சை; பரிசோதனை முகாம் வரணியில்

யாழ்ப்பாணம், மே. 11

யாழ்.மாவட்டத்திலுள்ள பின்தங்கிய பிரதேசங்களில் வாழும் கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டிய தேவையுடைய நோயாளிகளுக்கு யாழ் போதனா வைத்தியசாலையில் நன்கொடையாளர்களின் உதவியுடன் இலவசமாக கண்புரை சத்திர சிகிச்சையை மேற்கொள்வதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்கான நோயாளர்களைத் தெரிவு செய்யும் கண் பரிசோதனை முகாம் எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் வரணி பிரதேச வைத்தியசாலையிலும் சங்கானை பிரதேச வைத்திய சாலையிலும் நடைபெறவுள்ளது.

எனவே கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டிய தேவையுள்ள நோயாளர்கள் மேற்படி கண் பரிசோதனை முகாமில் கலந்துகொண்டு தங்கள் பெயர்களைப் பதிவு செய்யுமாறு யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி. ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (அ)

# பாடசாலை கட்டடத்திலிருந்து கீழே குதித்த 15 வயது மாணவி!

கொழும்பு, மே. 11

கண்டியில் உள்ள பாடசாலை ஒன்றின் 15 வயது மாணவி ஒருவர் நேற்று முன் தினம் பாடசாலை கட்டடத்திலிருந்து விழுந்து படுகாயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இப்பாடசாலையில் தரம் 10 இல் கல்வி கற்கும் சிறுமி, கட்டடமொன்றின் முதல் மாடியில் இருந்து குதித்து காயங்களுக்குள்ளான நிலையில் கண்டி பொது வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன் தினம் முற்பகல் 11.30 அளவில் இடம்பெற்றதாகவும், மாணவி 15 அடி உயரத்தில் இருந்து குதித்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பாடசாலை மாணவி ஒரு மாணவர் தலைவர் எனவும், கட்டுகஸ்தோட்டை - கஜுகமுவ பிரதேசத்தில் வசிப்பவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மாணவியின் தலையில் காயம் ஏற்பட்டுள்ளதைக் கண்டறிய ஸ்கான் பரிசோதனைக்கு உட்படுத்தப்படும் என்றும் அதன் பின்னர் மேலதிக சிகிச்சை அளிக்கப்படும் என்றும் மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன. (அ)

# முற்றாக எரிக்கப்பட்ட 32 பஸ்கள்; ஒரு வருடம் கடந்தும் தீர்வு இல்லை

கொழும்பு, மே. 11

கடந்த வருடம் மே மாதம் 09ஆம் திகதி நாட்டில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவத்தின்போது எரிக்கப்பட்ட பஸ்களுக்கு இதுவரை நட்டஈடு வழங்கப்படவில்லை என இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்தச் சம்பவம் இடம்பெற்று ஒரு வருடம் கடந்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

அன்றைய சம்பவத்தில் 32 பஸ்கள் முற்றாகச் சேதமடைந்தன. ஐம்பதுக்கும் மேற்பட்ட பஸ்கள் பகுதியளவில் சேதமடைந்தன.

நட்டஈடு வழங்கப்படாமையால் பஸ் உரிமையாளர்கள் கடும் சிரமத்துக்கு உள்ளாகியுள்ளனர். இதுவரை பஸ் ஊழியர்கள் வேலையிழந்துள்ளனர் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

பாதிக்கப்பட்ட அரசியல்வாதிகளுக்கு நிவாரணத் திட்டத்தை அரசாங்கம் தயாரித்தபோதிலும், அழிக்கப்பட்ட பஸ்களுக்கு அவ்வாறான திட்டம் எதுவும் நடைமுறைப்படுத்தப்படவில்லை என கெமுனு விஜேரத்ன மேலும் கூறினார். (அ)

# இலங்கை வருகிறது நாணய நிதியக் குழு

கொழும்பு, மே. 11

சர்வதேச நாணய நிதியத்தின் பணியாளர்கள் குழுவொன்று இன்று முதல் மே 23 வரை இலங்கைக்கான விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளது.

இந்த வருடத்தின் பிற்பகுதியில் முதல் மறுஆய்வுப் பணிக்கு முன்னதாக, இலங்கை அதிகாரிகளுடன் வழக்கமான ஆலோசனைகளின் ஒரு பகுதியாக இந்த விஜயம் அமைகிறது.

சர்வதேச நாணய நிதியத்தின் ஆசிய மற்றும் பசிபிக் பிராந்திய பணிப்பாளர் கிருஷ்ணா சீனிவாசனும் இந்த விஜயத்தில் பங்கேற்கவுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# நுவரெலியா நகரில் கேபிள் கார் திட்டம்

கொழும்பு, மே. 11

சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையில் நுவரெலியாவில் கேபிள் கார் திட்டமொன்று ஆரம்பிக்கப்படவுள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்த திட்டத்தை ஆரம்பிப் பதற்கு தேவையான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக சபையின் தலைவர் சம்பத் பிரசன்ன பெர்னாண்டோ தெரிவித்தார்.

இலங்கைக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் பொழுதுபோக்கை மேம்படுத்தும் வகையில் இந்த திட்டம் அறிமுகப்படுத்தப் படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதனை முன்னிட்டு பல புதிய திட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கு சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

அத்துடன், உலகின் புகழ் பெற்ற இசைக் குழுக்களை இலங்கைக்கு வரவழைத்து, இரவுவேளையில் இசை நிகழ்ச்சிகளை நடத்த எதிர்பார்ப்பதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் சம்பத் பிரசன்ன பெர்னாண்டோ தெரிவித்தார். (அ)

# தோல்வியில் முடிந்த கொலை முயற்சி!

கொழும்பு, மே. 11

மிதிகம பொலிஸ் நிலையத்துக்கு அருகில் உள்ள வர்த்தக நிலையமொன்றின் உரிமையாளரை, மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவர் சுட்டுக் கொல்ல முற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் நேற்று முன் தினம் இரவு 8 மணியளவில் இந்த சம்பவம் பதிவாகியுள்ளதாக மிதிகம பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபர் வர்த்தக நிலையத்தின் உள்ளே இருந்த போது, ரீ-56 துப்பாக்கியை பயன்படுத்தி துப்பாக்கிச் சூடு நடத்த முற்பட்டுள்ளனர். எனினும் துப்பாக்கி இயங்காததால் இந்த முயற்சி தோல்வியடைந்துள்ளது.

பின்னர் மோட்டார் சைக்கிளில் வந்த சந்தேகநபர்கள் இருவரும் தப்பிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 11.05.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.